ஒடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

♦

சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

♦

மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

# ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

♦

# சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

♦

# மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம் 1999

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டொமே டி , காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

© உவேஅ 1999

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
*சனவரி 2007*

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*

## ஆவணம் தயாரித்தல்

இந்த ஆவணம் மூன்று பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளின் (பசெதிந) பகுதிகள் கொண்டுள்ளது:

- ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைத் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை,
- சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை,
- மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை.

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பிற்கு இணங்க குறிப்பான பிரச்சனைகளை நிர்வகிக்கும் பொருட்டு பன்னாட்டு ஒப்பந்த அமைப்பை பெறுதல் அவசியமானது என்பதனை 1997ல் மீன்வளக்குழு உறுப்பினர்கள் அறிந்தவாறு பசெதி நடவடிக்கை அமைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளில் ஒவ்வொன்றுக்கும் பன்னாட்டு செயல் திட்டநடவடிக்கை மிகவும் பொருத்தமான தன்னார்வ சாதனமாக தெரிகிறது. 1998ல் உவே அமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்குமாக நடைபெற்ற அரசுக்கு இடையேயான இரண்டு கூட்டங்களில் மூன்று பகுதிகளும் அமைக்கபட்டது. 1999 பிப்ரவரியில் உவே அமைப்பின் மீன்வளக்குழுவின் 23வது அமர்வில் பசெதி நடவடிக்கை பின்பற்றப்பட்டு ஜுன் 1999ல் நடைபெற்ற அமர்வில் உவே அமைப்புக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது.

ஜப்பான், நார்வே, அமெரிக்கா, ஐரோப்பியக்குழு ஆகியவை அரசுக்கு இடையேயான கூட்டங்களுக்கும் தயார்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் நிதி வழங்கின.

உவே அமைப்பு

ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைத் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை. சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை. மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை ரோம், உவேஅ. 1999. 32 பக்

**சுருக்கம்**


பசெதிந கடல் பறவைகளுக்கானது ஒரு தன்னார்வ சாதனமாகும். ஓடுகயிறு மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் உள்ள நாடுகளுக்கு இது உரியதாகும். செயல்படுத்தும் நாடுகள் நிறைவேற்ற நடவடிக்கைகளின் அமைப்பை இதன் பகுதி மேற்கொள்கிறது. ஓடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல்பறவைகள் பிடிபடும் பிரச்சனை உள்ளதா என்பதனை ஓடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைத் தடுப்பதற்கான தேசீய செயல்திட்ட நடவடிக்கையைப்பின்பற்றி (தேசெதிந கடல்பறவைகள்) அறிவதற்கான மதிப்பீட்டையும் இது உள்ளடக்கும். தேசீய ஆய்வுகள் மற்றும் தெரிவித்தல் தேவை ஆகியவற்றிற்கான முறைகளைப் பயன்படுத்துவதையும் இது உள்ளடக்கும். இந்த நடவடிக்கைகள் தேர்ந்தெடுக்கத் தக்கவாறு எந்த வருடங்களில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

ஓடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதால் பிரச்சனை தங்களுக்கு இருப்பதாக தீர்மானிக்கும் நாடுகளை தேசெதி நடவடிக்கை கடல்பறவைகள் சேர்ப்பதற்கு பரிசீலிக்க பசெதிந கடல் பறவைகள் பொருத்தமான மட்டுப்படுத்தும் முறைகளுக்கான விளக்கத்தின் தொகுப்பை வழங்குகிறது. இந்த மட்டுப்படுத்தும் முறைகள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டவை அல்லது அமைப்பின் தொடக்க நிலையில் இருப்பவையாக இருக்கலாம். பார்வைக்குறிப்புகள் உரிய முறையில் வழங்கப்படும்.

பசெதிந சுறா மீன்களுக்கானது ஒரு தன்னார்வ சாதனமாகும். சுறா மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களைக் கொண்ட நாடுகளுக்கு இது உரியதாகும் செயல்படுத்தும் நாடுகள் நிறைவேற்ற நடவடிக்கைகளின் அமைப்பை இதன்பகுதி மேற்கொள்கிறது சுறா மீன்களைப்பாதுகாத்தலுக்கும் நிர்வகிக்கவும் சுறா மீன்களுக்கான தேசீய செயல்திட்ட நடவடிக்கையைப் பின்பற்றி தேசீய ஆய்வுகள் மற்றும் தெரிவித்தல் தேவை ஆகியவற்றிற்கான முறைகளைப் பயன்படுத்தி, சுறா மீன்கள் குறித்த இப்பிரச்சனை உள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தலையும் இது உள்ளடக்கும். இந்த நடவடிக்கைகள் தேர்ந்தெடுக்கத்தக்கவாறு, எந்த வருடங்களில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

பசெதி நடவடிக்கை மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கானது. ஒரு தன்னார்வ சாதனமாகும். மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களைக் கொண்ட நாடுகளுக்கு இது உரியதாகும். இதன்முதற்பகுதி பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையின் நிலை மற்றும் நோக்கங்களை விவரிக்கிறது. பசெதி நடவடிக்கைகளின் கோட்பாடுகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டுகிறது. இப்பகுதியின் நினைவூட்டு விரைவு நடவடிக்கைகளை விளக்குகிறது. செயல்படுத்துதலை உயர்த்தும் நுட்பத்தை அடையாளம் காண்கிறது. மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மதிப்பிடுதல் நிர்வகித்தல் தேசீயதிட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகியவை விரைவான நடவடிக்கைகளில் அடங்கும். செயல்படுத்துதலை உயர்த்தும் நுட்பத்தின் பகுதி விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பு தேசீய மற்றும் பன்னாட்டு அறிவித்தல் உவே அமைப்பின் பங்கு ஆகியவற்றை விளக்குகிறது. பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் எந்த வருடங்களில் முடிக்கப்படும் என்பது அடையாளம் காட்டப்பட வேண்டும்.

## உள்ளடக்கம்

பக்கம்

ஒடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைத் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை ........ 6

சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை ........ 16

மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை ........ 24

**ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைக்க பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை.**

**முன்னுரை**

1. பல்வேறு வர்த்தக ரீதியிலான ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுகின்றன. இத்தகைய தற்செயலான பிடிபாடுகளின் விளைவுகளைப் பற்றிய ஆதங்கம் அதிகரித்து வருகிறது. மீன்பிடிப்பில் உற்பத்தித்திறன் மற்றும் இலாபம் ஆகியவை மீதும் எதிரிடையான விளைவுகள் தற்செயலாக பிடிபடும் கடல் பறவைகளால் ஏற்படுகின்றன. ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகளுக்கு இழப்பு ஏற்பட்டு அவற்றை தற்செயலாக எடுத்துக் கொள்வதைத் தவிர்க்க முறைகள் வேண்டி அரசு, அரசு சாரா நிறுவனங்கள் வர்த்தக ரீதியிலான மீன்பிடிப்பு நிறுவனங்கள் விண்ணப்பிக்கின்றன.

2. தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடும் முக்கிய ஓடுகயிறு மீன்பிடிப்புகள் ஆவன: கடலில் சிலபகுதிகள் சூறை sword fish, bill fish; தென்கடலில் Petagonian tooth fish, மற்றும் வடகடலில் (பசிபிக் மற்றும் அட்லாண்டிக்) cods போன்றவை. கடல்பறவைகளில் அடிக்கடி பிடிபடும் சிற்றின வகைகள் தென்கடலில் albatrosses, petrels, வடக்கு அட்லாண்டிக் கடலில் northern fulmars வடக்கு பசிபிக் கடலில் fulmars மற்றும் gulls.

3. தெற்கு சமுத்திரப்பகுதியில் வர்த்தக ரீதியிலான மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக்குறைக்க அட்லாண்டிக் கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்புக்குழு (அகவாஉபாகு) அதன் 23 நாடுகளுக்கான கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைத்தடுப்பதற்காக 1992 ன் மட்டுப்படுத்தும் முறைகளைப் பின்பற்றியது.

4. தென்பிராந்திய நீல சூறை மீன்களைப்பாதுகாப்பதற்கான குழுவின் (தெபி.சூபாகு) சாதகமான நிலையால் ஆஸ்திரேலியா ஜப்பான், மற்றும் நியுசிலாந்து நாடுகள் ஆராய்ந்து தென்பிராந்திய நீல சூறை ஓடுகயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகளை மட்டுப்படுத்தும் முறைகளை 1994 முதல் மேற்கொண்டது. 1995 ல் இக்குழு ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதையும் சேர்த்து சுற்றுச்சூழலுக்கு தொடர்புடைய சிற்றின வகைகள் குறித்த பரிந்துரையைப் பின்பற்றியது. அப்பரிந்துரை தகவல் மற்றும் விபரங்கள் சேகரித்தல் மட்டுப்படுத்தும் முயற்சிகள் கல்வி மற்றும் விபரங்களை பரப்புதல் போன்றவற்றிற்காக கொள்கையை விதித்தது. இக்குழுவின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் அவற்றின் மீன்பிடிப்பில் பறவைகளுக்கு அச்சமூட்டும் கயிறுகளைப் பயன்படுத்தத் **(toripoles)** தொடங்கின.

5. கட்டுப்பாடுகளின் படி அமெரிக்க நாடுகளும் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைத் தடுக்க முறைகளைப்பின்பற்றியது. 1997ல் பெர்ரிங் கடல் அலியுட்டியன் தீவுகள் அலாஸ்காவின் வளைகுடாப் பகுதிகளிலும் 1998ல் உணவுக்கான மீன்வகை மீன்பிடிப்பிலும் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக் குறைக்க முயற்சிகளைப் பின்பற்றியது ஓடுகயிறு மீன்பிடிப்பு நடைபெறும் பல பிற நாடுகளும் இத்தகைய மட்டுப்படுத்தும் முறைகளைப் பின்பற்றின.

**தோற்றம்**

6. மார்ச் 1997ல் மீன்வளக்குழுவின் (மீவகு) 22வது அமர்வில் ஓடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவது பற்றிய விழிப்புணர்வு அதனால் கடல் பறவை தொகையில் ஏற்படும் எதிரிடையான விளைவுகள் ஆகியவற்றைக் குறிப்பில் கொண்டு உவே அமைப்பு வல்லுநர் கலந்தாய்வு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. மிகையான நிதியுடன் தற்செயலாக பிடிபடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் மீன்பிடிக்குழுவின் அடுத்த அமர்வில் செயல்திட்ட நடவடிக்கைக்கு கொண்டு செல்லும் வழிகாட்டும் முறைகளை அமைக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்தது.

7. ஒடு கயிறு மீன்பிடிப்பில் கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைத் தடுக்க குறைக்க பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கை (பசெதிந கடல்பறவைகள்) 1998[1] மார்ச் 25- 27 ல் டோக்கியோ வில் நடைபெற்ற தொழில்நுட்ப செயற்குழு கூட்டம் மற்றும் 1998 அக்டோபர் 26–30 ல் நடைபெற்ற மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்தல் சுறா மீன்பிடிப்பு மற்றும் ஓடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக பிடிபடுதல் 1998[2] ஜுலை 22–24 ல் ரோமில் நடைபெற்ற தயார்படுத்தும் கூட்டம் ஆகியவற்றின் மீதான கலந்தாய்வு மூலமாக அமைக்கப்பட்டது.

**நிலை மற்றும் தன்மை**

8. பசெதிந சுறா மீன்பிடிப்பு தன்னார்வமானது. உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தைப்பிரிவு 2 (ஈ),ன் கீழ் சிந்தித்தவாறு அதன் எல்லைக்குட்பட்டு இது விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் பயன்பாடு மற்றும் விளக்கத்திற்கு உவே அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தைவிதித் தொகுப்பின் பிரிவு 3 பொருந்துகிறது. பிற பன்னாட்டு சாதனங்களின் தொடர்புக்கும் பொருந்துகிறது. அனைத்து நாடுகளும்[3] இதனைச் செயல்படுத்த ஊக்கப்படுத்தப்படுகின்றன.

9. பசெதிந கடல்பறவைகள் தங்கள் நீர்ப்பரப்பில் அவற்றின் மீன்பிடிகலன்களோ அல்லது அந்திய நாட்டுக்கலன்களோ ஓடு கயிறு மீன்பிடிப்பு மேற்கொள்ளும் நாடுகளுக்குப் பொருந்தும். ஆழ்கடலிலும் தனிப்பட்ட பொருளாதார (தபொம) மண்டலத்திலும் ஓடு கயிறு மீன்பிடிப்பை மேற்கொள்ளும் நாடுகளுக்கும் பொருந்தும்.

**நோக்கம்**

10. நடத்தைவிதித்தொகுப்பின் பிரிவு 7. 6. 9. மற்றும் 8. 5. ஆகியவற்றின் நோக்கங்களை குறிப்பாகக் கவனத்தில் கொள்ளும் பொழுது பசெதி ந கடல்பறவை நோக்கம் ஓடு கயிறு மீன்பிடிப்பு நடைபெறும் இடங்களில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக் குறைப்பதே ஆகும்.

**செயல்படுத்துதல்**

11. பசெதிந கடல்பறவைகள் செயல்படுத்துவதில் நாடுகள் வரிசையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் பொருத்தமான வகையில் தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணக்கமான முறையில் இவை செய்யப்பட வேண்டும். இந்த வரிசையான நடவடிக்கைகளின் சரியான வடிவம், ஒடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவது குறித்தான மதிப்பீட்டை அடிப்டையாகக் கொண்டிருக்கும்.

12. ஓடு கயிறு மீன்பிடிப்பைக் கொண்ட நாடுகள் தற்செயலாக கடல்பறவை பிடிபடும் பிரச்சனை உள்ளதா என்பது குறித்து முடிவு செய்ய மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இப்பிரச்சனை இருக்குமெனில் தேசீய செயல்திட்டம் ஒன்றை ஓடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக் குறைப்பதற்காக பயன்படுத்த வேண்டும். (தேசெதி ந கடல் பறவைகள்) ‘‘ஓடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக்குறைக்க தேசீய

---

[1] பார்வை ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைத்தல் மீதான உவே அமைப்பின் தொழில் நுட்ப செயற்குழு கூட்ட அறிக்கை 1998 மார்ச் 25-27 டோக்கியோ ஜப்பான் உவே மீன்வள அறிக்கை எண் 585

[2] பார்வை மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்தல் சுறா மீன்பிடிப்பு மற்றும் ஓடு கயிறு மீன்பிடிப்பில் கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைத்தல் ஆகியவற்றிற்காக தயார்படுத்தும் கூட்டத்திற்கான அறிக்கை ஜுலை 22–24 1994 ரோம் இத்தாலி உவே அமைப்பின் அறிக்கை எண் 584

[3] இந்த ஆவணத்தில் நாடு என்ற வார்த்தை உவே அமைப்பின் உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதாரைக்குறிப்பிடும் நாடுகள் தவிர மீன்பிடி உரிமையையும் குறிக்கும்.

செயல்திட்ட செயல் நடவடிக்கை அமைப்பது குறித்தான தொழில் நுட்பக் குறிப்பினை'' பார்க்கவும். தேசெதிந கடல்பறவைகள் அமைத்திடும் பொழுது பொருத்தமான வகையில் மண்டல மேலாண்மை நிறுவனங்களின் அனுபவத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். தேசெ தி ந கடல் பறவைகள் அமைத்திட வல்லுநர் மற்றும் தொழில் நுட்ப உதவிக்கான நுட்பம் பற்றி உவே அமைப்பு பட்டியல் வழங்க வேண்டும்.

**13.** தே செதி ந கடல் பறவைகள் தேவை இல்லை என்று முடிவு செய்யும் நாடுகள், வழக்கமான அடிப்படையில் அந்த முடிவினை ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக மீன்வளத்தில் ஏற்படும் மாற்றங்களை தற்சமயம் உள்ள மீன்வளம் விரிவு அடைதல் மற்றும் அல்லது புதிய ஒடுகயிறு மீன்பிடிப்பு வளர்ச்சி போன்றவற்றை ஆய்வு செய்வதற்கு கருத்தில் கொள்ள வேண்டும். பின்வரும் ஆய்வின் அடிப்படையில் நாடுகள் பிரச்சனை உள்ளது என முடிவு செய்தல் பத்தி 12ல் உள்ள முறைகளை பின் தொடர வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குள் தேசெதிந கடல்பறவை செயல்படுத்த வேண்டும்.

**14.** உரிய நாட்டின் தேசெதி ந கடல் பறவைகள் பகுதியாக மதிப்பீடு சேர்க்கப்பட வேண்டும்.

**15.** தேசெதிந கடல் பறவைகள் வரையறை நிர்வகித்தல் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு நாடும் பொறுப்பாகும்.

**16.** ஒவ்வொரு ஒடு கயிறு மீன்பிடிப்பும் தனித்தன்மை உடையது என்பதனை நாடுகள் உணர வேண்டும். உரிய மீன்வளத்தின் மீன்பிடிப்பை நிகழும் இடத்தில் மதிப்பீடு செய்வதன் மூலமே பொருத்தமான மட்டுப்படுத்தும் முறைகளை அடையாளம் காண முடியும் என்பதையும் உணர வேண்டும். தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடும் நிகழ்வு நடைபெறும் இடங்களில் சில ஒடுகயிறு மீன்பிடிப்பில் தொழில்நுட்பம் மற்றும் இயக்க முறைகள் தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன அல்லது அமைக்கப்பட்டு வருகின்றன. வெவ்வேறு நாடுகளில் அமைக்கப்பட்ட முறைகள் இந்த ஆவணத்தின் கடைசியில் பட்டியல் இடப்பட்டுள்ளன (ஒடுகயிறு மீன்பிடிப்பில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதை குறைக்க தேசீய செயல் திட்ட நடவடிக்கையினை அமைப்பதற்கான தொழில் நுட்பக்குறிப்பு). இதனுள் உள்ள ஏதேனும் முறையையோ அல்லது அமைக்கப்படும் பிற பொருத்தமான முறைகளையோ பயன்படுத்துவதற்கான நாட்டின் உரிமையை இந்த பட்டியல் அனுகூலமற்றதாக்காது உவே அமைப்பின் சுற்றறிக்கை எண் 937ல் தற்சமயம் பயன்படுத்தப்படும் அல்லது அமைக்கப்பட்டு வரும் மட்டுப்படுத்தும் முறைகள் பற்றிய விரிவான விபரங்கள் மற்றும் ஆய்வுரைகள் உள்ளன.

**17.** மீன்வளக்குழுவின் 2001 அமர்வுக்குள் நாடுகள் தேசெதிந கடல் பறவைகள் செயல்படுத்துதலைத் தொடங்க வேண்டும்.

**18.** நாடுகள் அவற்றின் தேசெதிந கடல் பறவைகள் செயல்படுத்தும் பொழுது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் தேசெதிந கடல்பறவைகளின் திறனை உயர்த்த செலவு குறைந்த முறைகளை அடையாளம் காண்பதற்கு செயல்படுத்துதலை மதிப்பிட வேண்டும்.

**19.** நாடுகள் அவற்றின் உரிய பொறுப்புகளின் எல்லைக்குட்பட்டு மற்றும் பன்னாட்டு சட்டத்திற்கு இணங்க ஒடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைத் தவிர்க்க மண்டல சார் மண்டல மீன்வள நிறுவனங்கள் ஏற்பாடுகள் மற்றும் பிற வகையிலான ஒத்துழைப்பு மூலமாக கடுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

**20.** தேசெதிந கடல் பறவைகள் செயல் படுத்தும் பொழுது உலக அளவில் பிரச்சனையின் தன்மையை உணர்ந்து தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக்குறைக்க ஒடு கயிறு மீன்பிடிப்பைக் கொண்ட நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது என்பதை நாடுகள் உணர வேண்டும். ஆராய்ச்சி, பயிற்சி, விபரங்கள் மேம்படுத்தும் பொருட்களை

ஏற்படுத்துதல் ஆகியவற்றில் இருவித மற்றும் பல வித ஏற்பாடுகள் மூலமாகவும் உவே அமைப்பின் மூலமாகவும் ஒத்துழைக்க நாடுகள் கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

21. பொறுப்பார்ந்த மீன்வளநடத்தை விதித் தொகுப்பின் மீது இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை அறிவித்தலின் பகுதியாக நாடுகள் அவற்றின் தேசெதிந கடல் பறவைகள் அமைத்தல் செயல் படுத்துதல் மதிப்பீடு செய்தல் மீதான முன்னேற்றத்தையும் உவேஅ க்கு தெரிவிக்க வேண்டும்.

**உவே அமைப்பின் பங்கு**

22. உவேஅ இதன் கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்ற வரையும் வழக்கமான திட்ட நடவடிக்கைகளின் பகுதியாகவும் உவேஅ நாடுகளுக்கு பசெ திந கடல் பறவைகள் செயல்படுத்த உவேஅ உதவிடும்.

23. இதன் கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்றவரை தனிப்பட்டவழக்கமான திட்டங்களுக்கான நிதியுடன் நாட்டுக்குள் தொழில் உதவித் திட்டங்கள் மூலமாகவும் மற்றும் இந்த நோக்கத்திற்காக நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய மிகையான வரவு செலவு திட்ட நிதியைப் பயன்படுத்தியும் உவே அமைப்பு தேசெதி ந கடல் பறவைகள் அமைத்து செயல் படுத்திட உதவும்.

24. மீன்வளக்குழுவின் மூலமாக (மீவகு) பசெதி ந கடல் பறவைகள் செயல்படுத்துதல் மீதான முன்னேற்றத்தின் நிலை பற்றி உவேஅ இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிவிக்கும்.

**ஓடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக் குறைக்க தேசீய செயல்திட்ட நடவடிக்கை அமைப்பதற்கான தொழில் நுட்பக் குறிப்பு (தேசெதி ந கடல் பறவைகள்)**

இது முழுமையானதோ அல்லது தேவையான அனைத்தும் கொண்ட முழுமையான பட்டியல் அல்ல. ஆனால் தேசெ திந கடல் பறவைகள் தயாரிக்க விழிகாட்டுதலை வழங்குகிறது.

ஒடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல்பறவைகள் பிடிபடுவதைக் குறைக்க ஒரு நாடு வடிவமைத்து, செயல்படுத்தி நிர்வகிப்பதற்கான தேசெதிந கடல்பறவைகள்.

## I. மதிப்பீடு

1. ஓடு கயிறு மீன்பிடிப்பில் அது நிகழும் இடங்களில் நாட்டில் கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதின் நிலை மற்றும் விரிவு ஆகியவற்றைத் தீர்மானிப்பதே மதிப்பீட்டின் நோக்கமாகும்.

2. கீழ்க்கண்டவற்றை சேகரித்து ஆய்வு செய்வதை மதிப்பீடு உள்ளடக்கும். ஆனால் வரையறுக்கப்பட்டது அல்ல:

- தேசெதி ந கடல்பறவைகள் தேவையை மதிப்பிட பயன்படுத்தப்படும் அடிப்படை
- மீன்பிடிகலன்களின் விபரம் (அளவு அடிப்படையில் கலன்களின் எண்ணிக்கை)
- மீன்பிடிப்பு பற்றிய தொழில்நுட்ப விபரங்கள் (அடித்தளம், **Pelagic** முறைகள்)
- மீன்பிடிப்பு பகுதிகள்
- ஓடுகயிறு மீன்பிடிப்பு மூலம் மீன்பிடி உழைப்பு (பருவகாலம், சிற்றின வகை மீன்பாடு தூண்டில்களின் எண்ணிக்கை/வருடம்/மீன்வளம்)
- தெரியும் எனில் மீன்பிடிப்பு பகுதிகளில் கடல்பறவை தொகையின் நிலை
- வருடத்தில் மொத்தம் பிடிபடும் கடல் பறவைகள் (எண்ணிக்கை/ஆயிரம் தூண்டில் வரிசையில்/சிற்றின வகை/ஓடு கயிறு மீன்பிடிப்பு)
- தற்சமயம் பயன்பாட்டில் உள்ள மட்டுப்படுத்தும் முறைகள் தற்செயலாக கடல்பறவைகள் பிடிபடுவதைக் குறைப்பதில் அவற்றின் திறன்.

- தற்செயலாக கடல்பறவைகள் பிடிபடுவதை கண்காணித்தல் (பார்வையாளர் திட்டம் போன்றவை)
- தேசெதி ந கடல்பறவைகள் அமைத்து செயல்படுத்த தீர்மானம், முடிவுரை தெரிவித்தல்.

## II. தேசெதி ந கடல்பறவைகள்

தேசெதிந கடல்பறவை கீழ்க்கண்டவற்றைப் பெற்றிருக்கும்.

### 1. மட்டுப்படுத்தும் முறைகளைத் தெரிவித்தல்

தேசெதி ந கடல்பறவைகள் பொருத்தமான மட்டுப்படுத்தும் முறைகளை வழங்குகிறது இவை திறன் உடையதாக நிரூபிக்கபட்டவை மீன்பிடித் தொழிலுக்கு குறைந்த செலவில் ஆனவை. வெவ்வேறு மட்டுப்படுத்தும் முறைகள் அல்லது சாதனங்களை சேர்த்து மட்டுப்படுத்தும் முறைகளின் திறனை அதிகரிக்கச்செய்தால் ஒவ்வொரு நாடும் பல்வகையான வெவ்வேறு முறைகளை செயல்படுத்துதல் பயன்தரக்கூடியது என்பதனை உணரும். தனித்த ஒடுகயிறு மீன்பிடிப்பிற்கு குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் தேவை ஆகியவற்றையும் அவை வெளிப்படுத்தும்.

### 2. ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்துதல்

தேசெதிந கடல்பறவைகள் கீழ்க்கண்டவற்றை சேர்த்து ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்துதலுக்கான திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும். (1) பெரிதும் செயல்முறைக்கான திறமைமிக்க கடல்பறவைகளை தடுக்கும் சாதனத்தை அமைத்தல். (2) கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக்குறைக்கும் பிற தொழில் நுட்பங்கள் மற்றும் செயல் முறைகளை மேம்படுத்துதல் மற்றும் (3) ஒடுகயிறு மீன்பிடிப்பில் இப்பிரச்சனை நிகழும் இடங்களில் பயன்படுத்தப்படும் மட்டுப்படுத்தும் முறைகளின் திறனை மதிப்பிட குறிப்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

### 3. கல்வி பயிற்சி மற்றும் விளம்பரப்படுத்துதல்

மீன்பிடிப்போர் மீன்பிடிப்பு சங்கங்கள் மற்றும் பிற தொடர்புடைய குழுக்கள் இடையே ஒடுகயிறு மீன்பிடிப்பில் இது நிகழும் இடங்களில் தற்செயலாக கடல்பறவைகள் பிடிபடுவதைக் குறைப்பதற்கான தேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேசெதிந கடல் பறவைகள் முறைகளை தெரிவிக்கிறது. ஒடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக பறவைகள் பிடிபடுவது பற்றிய தேசீய மற்றும் பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கைகள் மற்றும் விபரங்கள் தேசீய தொழிலில் ஆராய்ச்சி மற்றும் அதன் சொந்த நிர்வாகத்தில் தேசெதி ந கடல்பறவைகள் செயல் படுத்துதலை மேம்படுத்துதல் ஆகியவை பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தும். கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைக்க நிதி உதவி அல்லது தொழில் நுட்பம் ஆகியவை பற்றிய தகவல்களை வழங்குகிறது இயன்ற வரை மீன்பிடிப்போர் மீன்வள மேலாளர்கள் மீன்பிடிச்சாதன தொழில் நுட்ப வல்லுநர்கள் படகு கட்டுபவர்கள் பாதுகாவலர்கள் பிற ஆர்வ முடைய பொதுமக்கள் ஆகியோருக்காக எட்டிப்பிடிக்ககூடிய திட்டங்களை வடிவமைப்பது செயல்படுத்துவது ஆகியவை திட்டத்தில் விவரிக்கப்பட வேண்டும். கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடுவது மற்றும் மட்டுப்படுத்தும் முறைகள் ஆகிய பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் தன்மையை மேம்படுத்துவதை இந்த திட்டங்கள் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எட்டிப்பிடிக்கக்கூடிய இத்திட்டங்களில் கல்வி பாடத்திட்டங்கள் மற்றும் வழிகாட்டு முறைகளை படக்காட்சி சிறுகையடக்க புத்தகங்கள் விளம்பர அட்டைகள் துண்டு வெளியீடுகள் மூலமாக பரப்புதலைச் சேர்க்க வேண்டும். பாதுகாப்பு முறைகள் கடல் பறவைகளினால் ஏற்படும் இரை இழப்பினை நீக்குவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் மீன்பிடித்திறனின் உயர்வால் ஏற்படும் பொருளாதாரப் பயன்கள் ஆகிய இரண்டின் மீது திட்டங்கள் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும்.

## 4. விபரங்கள் சேகரிப்பு

ஒடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல்பறவைகள் பிடிபடுவதைக் குறைக்கவும் மட்டுப்படுத்தும் முயற்சிகளின் திறமையையும் தீர்மானிக்கும் பொருட்டு நம்பிக்கையான விபரங்களை விபரங்கள் சேகரிப்பு திட்டங்கள் சேகரிக்க வேண்டும்.

**ஒடு கயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக் குறைக்க சில தேர்ந்தெடுக்கத்தக்க தொழில்நுட்ப இயக்க முறைகள் மீதான தொழில் நுட்பக்குறிப்பு**

## I. முன்னுரை

கடல் பறவைகள் தற்காலிகமாக பிடிபடுவதைக்குறைக்க கடல் பறவைகள் மற்றும் இரையிடப்பட்ட தூண்டில்களுக்கு இடையே போட்டியைக் குறைப்பது அவசியமாகிறது இணைத்து பயன்படுத்தப்பட்டால் மட்டுப்படுத்தும் முறைகளின் திறனை கருத்துகள் மேம்படுத்தும் என்பதனை குறிப்பில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு முறைக்கும் மீன்பிடிப்போருக்காக திறன் மற்றும் 'விலை' சுருக்கமாக அளிக்கப்படுகிறது. இதில் 'திறன்' என்பது தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதை எதுவரைகுறைக்கும் என்பதனை வரையறுக்கிறது. விலை என்பது தொடக்க செலவினம் அல்லது முதலீடு மற்றும் நடைபெறும் ஏதேனும் இயக்கச் செலவினம்.

பிற தொழில்நுட்ப விருப்பங்கள் அமைப்பில் உள்ளன. இப்பிரிவில் மீன்பிடிப்போரும் ஆராய்ச்சியாளர்களும் புதிய மட்டுப்படுத்தும் முறைகளை அமைக்கலாம். எனவே முறைகளின் பட்டியல் வருங்காலத்தில் அதிகரிக்கக்கூடும்.

வெவ்வேறான மட்டுப்படுத்தும் முறைகளை அல்லது சாதனங்களை இணைப்பதன் மூலம் மட்டுப்படுத்தும் முறைகளின் திறன் அதிகரிக்கும் எனில் ஒவ்வொரு நாடும் வெவ்வேறான முறைகளைச் செயல்படுத்துவது பயன்தரக்கூடியது என்பதனை உணரும். முறைகள் அவர்களின் நிலைக்கு பொருத்தமாக இருக்கும். குறிப்பான ஓடுகயிறு மீன்பிடிப்பின் தேவைகளையும் பிரதிபலிக்கும்.

கீழ்கண்ட பட்டியல் கட்டளையல்ல. விரிவானதுமல்ல. தற்போது பயன்படுத்தப்படும் அல்லது அமைப்பில் உள்ள முறைகளின் தகவல் மையத்தை உவே அமைப்பு நிர்வகிக்கும்.

## II. தொழில்நுட்ப முறைகள்

### 1. இரைகளின் அமிழும் தன்மையை அதிகரித்தல்

அ. ஓடுகயிறு சாதனத்தின் எடையை அதிகப்படுத்துதல்.

*கருத்து:* இரையிடப்பட்ட தூண்டிகளின் அமிழும் வேகத்தை அதிகப்படுத்துதல் மற்றும் கடல் பறவைகளுக்கு அவற்றை வெளிப்படுத்தும் நேரத்தைக் குறைத்தல்.

*திறன்*: பொருத்தமான ஓடுகயிறுக்கான எடை பறவைகளிடம் இரை இழப்பை தவிர்த்தலில் பெரிது திறமையானது என்பதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

*செலவினம்*: எடைக்கான பொருளை தொடக்கத்தில் வாங்குவதே செலவினமாகும் (கனமான மீன்பிடிச்சாதனம் அல்லது எடை) மற்றும் மீன்பிடிப்பில் இழக்கும் எடையை மீண்டும் வைப்பதற்கான நடப்புச் செலவினம்.

ஆ. இரை அமைத்தல்

*கருத்து*: இரை அமைத்தல் மற்றும் /அல்லது நீச்சல் பைகளில் ஓட்டையிடுதல் மூலம் இரையில் மிதப்பு பிரச்சனைகளைத் தீர்த்தல்.

*திறன்*: இரை அமைக்கும் முறை பயன்படுத்தப்பட்டால் தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதின் விகிதம் குறைகிறது. இரையாக காற்று வெளியேற்றப்பட்ட பைகளைக் கொண்ட மீன்களை பயன்படுத்தும் பொழுது மீன்கள் காற்று வெளியேற்றப்படாத மீன்களைக்காட்டிலும் மிகவும் விரைவாக நீரில் அமிழ்கிறது என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

*செலவினம்*: இரை அமைப்பதற்கான கருவி அல்லது காற்று அடைத்தபைகளால் ஏற்படும் மிதப்பை சீர் செய்ய மிகையான எடை இவற்றிற்கான செலவினம்

இ) கயிறு அமைக்கும் இயந்திரம்

*கருத்து*: மீன்பிடிச்சாதனங்களை விடும் பொழுது கயிறுகளின் முறுக்கை நீக்கி கயிறுகளின் அமிழும் திறனை அதிகரித்தல்.

*திறன்:* அளவைக்குரிய மதிப்பீடுகள் இல்லை எனினும் இம்முறையால் கயிறு அமிழ்வது மிகவும் விரைவானது. எனவே இரையிடப்பட்ட தூண்டில்கள் கடல் பறவைகளுக்கு கிடைக்கும் வாய்ப்பு குறைக்கப்படுகிறது.

*செலவினம்*: சில மீன்வளங்களுக்காக கயிறு அமைக்க வாங்கப்படும் இயந்திரத்தின் விலையே தொடக்க செலவினமாகும்.

**2. நீருக்குள் சாய்வன கருவி, உறை, அல்லது புனல் அமைத்தல்**

*கருத்து*: இரையிடப்பட்ட தூண்டில்களை கடல் பறவைகள் அடைவதைத் தடுக்க நீருக்குள் கயிறு அமைத்தல்

*திறன்* **:** நீருக்குள் கயிறுகளை அமைக்கும் சாதனம் இன்னும் அமைப்பில் உள்ளது. மிகுந்த திறன் உடையது

*செலவு:* நீருக்குள் சாதனம் அமைப்பதற்காக தொடக்கத்தில் சாதனத்தை வாங்குவதே செலவினமாகும்.

**3. பறவைகளைப் பயமுறுத்தும் கயிற்றினை மேலாக அல்லது இரையிடப்பட்ட தூண்டில்கள் நீருக்குள் செல்லும் இடங்களில் அமைத்தல்.**

*கருத்து* **:** இரையிடப்பட்ட தூண்டில்கள் நீருக்குள் செல்லும் இடங்களில் பறவைகள் இவற்றை அடைவதைத் தடுத்தல் இரையிடப்பட்ட தூண்டில்களுக்கு செல்லும் வழியைத் தடுத்து பறவைகள் இரையிடப்பட்ட தூண்டில்களை எடுப்பதைக் குறைக்க பறவை பயமுறுத்தும் கயிறு வடிவமைக்கப்பட்டுள்ளது. கலன் மீன்பிடி முறை இடம் ஆகியவற்றிற்கு ஏற்ப வடிவமைப்பின் வரையறை மாறுபடும். அதனின் திறனுக்கும் இவை காரணமாகும்

*திறன்:* பல ஆய்வுகள் மற்றும் நிகழ்வுகளின் பார்வைகள் சரியாக வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டால் இந்த சாதனங்களின் திறன் குறிப்பிடத்தக்கது என்பது எடுத்துகாட்டப்பட்டுள்ளது.

*செலவினம்*: பறவைகளைப் பயமுறுத்தும் கயிறு வாங்கி நிறுவிட ஆகும் குறைந்த தொடக்க விலையே செலவினமாகும்.

**4. இரைகளை வீசும் இயந்திரம்**

*கருத்து:* பறவைகளைப் பயமுறுத்தும் கயிற்றால் பாதுகாக்கப்படும் பகுதிகளில் மற்றும் உந்து இயந்திரம் கப்பல் விட்டுச் செல்லும் தடம் ஆகியவற்றால் ஏற்படும் கொந்தளிக்கும் பகுதிக்கு வெளியே இரைகளை வைத்தல்.

*திறன்:* பறவைகளைப்பயமுறுத்தும் கயிறு பாதுகாக்கும் பகுதிக்குள் இரைகளை விடுதல் கடல்பறவைகளுக்கு இரையிடப்பட்ட தூண்டிகள் கிடைக்கும் வாய்ப்புகளை குறைக்கிறது இரை வீசும் இயந்திரங்களைப்பயன்படுத்துவது பறவைகளைப்பயமுறுத்தும் கயிறுகள் இன்றி அல்லது இரைகள் பறவைகளைப்பயமுறுத்தும் கயிறுகளின் பாதுகாப்புக்குள் இல்லாத வகையில் இரண்டு வகைகளையும் பயன்படுத்தி எதுவரை இரை இழப்பு குறைக்கப்படுகிறது என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

*செலவினம்:* இரைவீசும் இயந்திரத்தை தொடக்கத்தில் வாங்க ஆகும் அதிக செலவே செலவினமாகும்.

**5. பறவைகளைப்பயமுறுத்தும் திரை**

*கருத்து:* இழுவையின் பொழுது பறவைகளைப் பயமுறுத்தும் திரையைப் பயன்படுத்தி கடல் பறவைகள் இரையிடப்பட்ட தூண்டில்களை எடுப்பதைத் தடுத்தல்.

*திறன்:* நிகழ்வுகளின் சாட்சியம் இழுவைப் பகுதிகளில் இரையை பறவைகள் எடுப்பதை திறனுடன் அதைரியப்படுத்துதலை குறிப்பிடுகிறது.

*செலவினம்:* பொருட்களை வாங்குவதற்கான குறைந்த செலவினம்.

**6. செயற்கையான இரைகள் அல்லது கவர்ச்சிப் பொருள்**

*கருத்து:* கிடைக்கும் தன்மை அல்லது சுவையை குறைத்தல்.

*திறன்:* புதிய இரைகள் அமைப்பில் உள்ளன. திறன் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

*செலவினம்:* தற்சமயம் தெரியவில்லை.

**7. தூண்டிலை மாற்றி அமைத்தல்**

*கருத்து:* கடல் பறவைகள் இரையிடப்பட்ட தூண்டிலை தாக்கும் பொழுது பிடிபட்டுக் கொள்ளும் சாத்தியத்தைக் குறைக்கும் தூண்டில் வகைகளைப் பயன்படுத்துதல்.

*திறன்:* தற்செயலாக பிடிபடும் கடல் பறவைகளின் சிற்றின வகையில் தூண்டில்களை மாற்றி அமைத்தலின் விளைவு மிகக்குறைவாகவே புரிந்து கொள்ளப்படுகிறது.

*செலவினம்:* தெரியவில்லை.

**8. ஒலியியல் தடுப்பு**

*கருத்து:* ஒலியியல் அடையாளங்களை உயர்ந்த அலைவரிசை அதிக சத்தம் துயர் அழைப்பு போன்றவற்றை ஓடுகயிறிலிருந்து பயன்படுத்தி பறவைகளைத் தடுத்தல்.

*திறன்:* பின்னணி சத்தம் அதிகம் என்பதால் கடல் பறவைகளுக்கு இடையே சத்தங்களுக்கு பழக்கம் என்பதால் திறன் உடைமைக்கு குறைந்த சாத்தியமே.

*செலவினம்:* தெரியவில்லை

**9. தண்ணீர் பீரங்கிகள்**

*கருத்து:* இரையிடப்பட்ட தூண்டில்களை அதிக அழுத்தத்தில் நீரைப்பயன்படுத்தி மறைத்து வைத்தல்;

திறன் இம் முறையின் திறன் பற்றி இறுதியான முடிவு ஏதும் இல்லை;

*செலவினம்:* தெரியவில்லை;

**10. காந்த தடுப்பு**

*கருத்து:* காந்த சக்தியை களத்தில் ஏற்படுத்துவதன் மூலம் பறவைகளின் காந்த ஈர்ப்பை கலங்கச் செய்வது.

*திறன்:* செய்முறை சோதனைகளில் விளைவுக்கான அடையாளம் ஏதுமில்லை

*செலவினம்* : தெரியவில்லை

III. **இயக்க முறைகள்**

**1. இரையின் தெரியும் தன்மையைக் குறைத்தல் (இரவில் அமைத்தல்)**

*கருத்து:* இருட்டில் அமைத்தல் நீரில் இரையிடப்பட்ட தூண்டில்களின் ஒளியூட்டும் தன்மையைக்குறைத்தல்.

*திறன்:* பொதுவாக இம்முறை மிகுந்த திறன் உடையதாகக்கருதப்படுகிறது எனினும் மீன்பிடிப்பு பகுதிகளுக்கு ஏற்பவும் பருவ காலத்திற்கு ஏற்பவும் கடல் பறவைகளின் சிற்றின வகைகளுக்கு ஏற்றபடி திறன் வேறுபடும். பௌர்ணமி நாட்களில் இம்முறையின் திறன் குறையும்.

*செலவினம்:* குறிப்பாக சிறிய ஓடுகயிறு உள்ளோருக்கு கயிறுகளை இருட்டில் அமைத்தல் என்னும் கட்டுப்பாடு மீன்பிடித்திறனைப் பாதிக்கும். பொருந்தியவகையில் கலனில் ஒளி அமைக்க சிறிய செலவினம் ஏற்படும். இத்தகைய கட்டுப்பாடு குறைந்த கால அளவில் மீன்பிடித்திறனைப் பெருக்க செலவினம் மிக்க தொழில் நுட்பத்தில் முதலீடு செய்ய வைக்கும்.

**2. கடல்பறவைகளுக்கு கலன்களின் வசீகரிப்பு தன்மையைக் குறைத்தல்**

*கருத்து:* கடல்பறவைக்கு கலன்களின் வசீகரிப்பு தன்மையைக்குறைப்பது கடல் பறவைகள் தற்செயலாக பிடிபடும் சாத்தியத்தைக்குறைக்கும் பொருட்கள் (உ.ம். ஒதுக்கப்பட்ட மீன்கள், கழிவுகள்) கலனிலிருந்து ஒரே நேரத்தில் வெளியேற்றப்படுதல் வேண்டும். அல்லது பறவைகளுக்கு மிகக்குறைந்த அளவிலே கிடைக்கும் வகையில் அல்லது அவற்றிற்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் வெளியேற்றப்படுதல் வேண்டும். ஒதுக்கப்பட்ட மீன்கள் கழிவுகள் மீன்தலைகள் போன்றவை பதிந்த தூண்டில்களுடன் குவியலாகக் கொட்டுதலை தவிர்த்தலையும் இது உள்ளடக்கும். கழிவுக்குவியல்களைக் கொட்டுதல் தவிர்க்க முடியாது எனின் கலனில் கயிறுகள் அமைத்திருப்பதற்கு எதிர்த்திசையில் அல்லது கலனுக்கு பறவைகள் வசீகரிக்கப்படாத வகையில் (உ.ம். இரவு நேரம்) இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

*திறன்:* கழிவு வெளியேற்றும் பிரச்சனை சிக்கலானது இந்நாள் வரை பலமுறைகளின் விளைவுகள் குறித்தான ஆய்வுகளின் முடிவுகள் முரணாக உள்ளன.

*செலவினம்:* குறைவானது சில சூழ்நிலைகளில் கழிவுகளை வைத்திருப்பதற்காக வழங்கப்படுவது அல்லது கலனில் கழிவுகளை வெளியேற்றும் அமைப்பிற்கு மறுவடிவம் அமைப்பதற்காக வழங்கப்படுவது போன்றவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கும்.

**3. பகுதி மற்றும் பருவகால மூடுதல்கள்**

*கருத்து:* இனப்பெருக்கம் மற்றும் இரைதேடும் கடல்பறவைகள் கூடும் பொழுது கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடுவதைக் குறைத்தல்.

*திறன்:* பகுதி மற்றும் பருவகால மூடுதல்கள் மிகவும் திறன் உடையவை (மிகுந்த அளவில் இரை தேடும் இடங்கள் அல்லது இனப்பெருக்க இடங்களிலிருந்து முதிர்ச்சி அடைந்த பறவைகள் பறக்கும் தூரத்தை பெற்றோர் கடமைகள் கட்டுப்படுத்தும் பொழுது குஞ்சுகளின் நலத்தைப்பேணும் நேரங்கள் போன்றவைகளில் எனினும் பிற கடல் பறவைகளின் பகுதிகளுக்கு மீன்பிடிகலனை இடம் பெயர்த்தும் தேவையும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

*செலவினம்:* தெரியவில்லை மீன்பிடிப்பின் மீதான பகுதி அல்லது பருவ கால கட்டுப்பாடு மீன்பிடித் திறனைப் பாதிக்கும்.

**4. இணக்கமான நிர்வகித்தல் தேவைப்படாத மட்டுப்படுத்தும் முறைகளைப் பயன்படுத்தும் கலன்களுக்கு உரிமம் அளிப்பதில் முன்னுரிமை வழங்குதல்.**

*கருத்து:* இணக்கமான நிர்வகித்தல் தேவைப்படாத திறமையான மட்டுப்படுத்தும் முறைகளைப் பயன்படுத்துதலுக்கு ஊக்கம் வழங்குதல்.

*திறன்:* மட்டுப்படுத்தும் முறைகளைக் கையாள்வதற்கு தற்செயலாக கடல் பறவைகள் பிடிபடுவதைக் குறைக்க முறைகள் அமைப்பதற்கும் தூண்டிடும் திறன் மிக்கது.

*செலவினம்:* தெரியவில்லை.

**5. உயிருடன் உள்ள பறவைகள் விடுவித்தல்**

*கருத்து:* முன் எச்சரிக்கைகள் இருந்த போதிலும் கடல்பறவைகள் தற்செயலாக பிடிபடும் எனில் தளத்திற்கு அப்பறவைகளைக் கொண்டு வருவது உயிருடன் அவற்றை விடுவிப்பது ஆகியவற்றை உறுதி செய்திட ஒவ்வொரு பொருத்தமான முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும் இயலும் பொழுது தூண்டில்கள் பறவைகளிடமிருந்து பறவைகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்காத வகையில் நீக்கப்பட வேண்டும்.

*திறன்:* தளத்திற்கு உயிருடன் கொண்டு வரப்படும் பறவைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது. கயிறு அமைப்பில் கொல்லப்படும் பறவைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது இது மிகவும் குறைந்ததாகக் கருதப்படுகிறது.

*செலவினம்:* தெரியவில்லை.

**சுறா மீன்களைப்பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை**

**முன்னுரை**

1. பல நூற்றாண்டுகளாக கடலோர நீர்ப்பரப்பில் வளம்குன்றாத வகையில் மீனவர்கள் சுறா மீன்களுக்காக மீன்பிடிப்பு நடத்தினர். இன்றும் சிலர் நடத்துகின்றனர் எனினும், சமீபத்திய பத்தாண்டுகளில் தொலைதூர சந்தை வசதிக்கான வழியுடன் தற்காலத்திய தொழிநுட்பமும் இணைந்தமையால் சுறா மீன்பிடிப்பில் உழைப்பு மற்றும் மகசூல் ஆகியவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டது. அவ்வாறே மீன்பிடிக்கும் பரப்பும் விரிவானது.

2. சுறா மீன்பிடிப்பு அதிகரிப்பு மீதான அக்கறை ஏற்பட்டுள்ளது. உலகில் சமுத்திரத்தின் பல பகுதிகளில் சில சுறா மீன்களின் சிற்றினவகை தொகையில் விளைவுகள் ஏற்பட்டுள்ளது. இது ஏனெனில் சுறா மீன்கள் வழக்கமாக நெருங்கிய இருப்பு சேர்ப்பு தொடர்பு கொண்டிருக்கும். அதிக மீன்பிடிப்பால் பதிலுரைக்க இழப்பினை ஈடு செய்ய நீண்ட மீட்பு நேரம் எடுத்துக்கொள்ளும் (தாமதமான இனப்பெருக்கத்திற்கான முழுவளர்ச்சி, சிலகுட்டிகள், குறைந்த அளவிலான இயற்கையான இறப்பு) மற்றும் கடினமான இடம் சார்ந்த அமைப்பு (அளவு இனப்பாகுபாடு மற்றும் பருவகால இடம் பெயர்தல்)

3. கிடைக்கக் கூடிய மீன்பிடிப்பு உழைப்பு பிடித்து இறக்கப்பட்டவை வர்த்தக தகவல்கள் போன்றவை கிடைக்காமையாலும் பல சிற்றின வகைகளை அடையாளம் காண்பதற்கும் அவற்றின் உயிரினத்தன்மைகள் பற்றியும் அறிவதற்கும் குறைந்த விபரங்களே உள்ளன. ஆகையால் சுறாக்களைப்பற்றிய அறிவின் தற்போதைய நிலை சுறா மீன்பிடிப்பில் பயன்படுத்தப்படும் முறைகள் போன்றவை சுறாக்களைப்பாதுகாத்தல் மற்றும் மேலாண்மையில் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன. சுறாக்களின் இருப்பு நிலை மீதான அறிவை வளர்த்துக் கொள்ளவும் தேவையான விபரங்கள் சேகரித்தலை எளிதாக்கவும் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக்கும் போதிய நிதி தேவைப்படுகிறது.

4. வழிப்படுத்தப்பட்ட சுறா மீன்பிடிப்பையும் மற்றும் பல சிற்றின வகை மீன்பிடிப்பில் சுறா மீன்கள் குறிப்பிடும் வகையில் உபரியாக அங்கம் வகிப்பதையும் சரியாக மேலாண்மை செய்வது அவசியம் என்பது நிலவி வரும் கருத்து ஆகும். சில நிகழ்வுகளில் மேலாண்மைக்கான தேவை விரைவான ஒன்றாகும்.

5. சில நாடுகள் சுறா மீன்பிடிப்பிற்காக தனிப்பட்ட மேலாண்மை திட்டங்களைப் பெற்றிருக்கும். அடையும் பாதையை கண்காணிப்பது, சுறா மீன்களை உபரியாக பெறும் மீன்பிடி முறைகளைக் குறைப்பது உட்பட்ட தொழில் நுட்பங்களை இத்திட்டங்கள் உள்ளடக்கும். சுறா மீன்களை முழுதுமாக பயன்படுத்த உதவிடும். எனினும், சுறா மீன்கள் ஆழ்கடல் உட்பட பரந்த பகுதிகளில் பங்கீடு கொள்வதால் மற்றும் பல சிற்றின வகைகள் நீண்ட தூரம் இடம் பெயர்வதால் பன்னாட்டு ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புடன் சுறா மேலாண்மை திட்டங்களை மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் அதிகரிக்கிறது. தற்சமயம் சுறா மீன்பிடிப்பை திறமையுடன் தெரிவிக்க பன்னாட்டு நுட்பங்கள் உள்ளன.

6. அமெரிக்க நாட்டிற்குள்ளான வெப்பமண்டல சூறைமீன்குழு கடல் ஆய்வு ஆராய்ச்சிக்கான பன்னாட்டு குழு அட்லாண்டிக் கடலின் சூறை மீன்களைப்பாதுகாப்பதற்கான பன்னாட்டு குழு வடமேற்கு அட்லாண்டிக் மீன்வள நிறுவனம் மேற்கு ஆப்ரிக்க நாடுகளின் சார் மண்டல மீன்வளக் குழு மீன்வள மேம்பாட்டிற்கான இலத்தின் அமெரிக்க நிறுவனம் இந்தியப் பெருங்கடல் சூறை மீன்குழு தெற்கத்திய நீல செதிள் சூறை மீன்களைப் பாதுகாத்தலுக்கான குழு பசிபிக் சமுதாயத்தினரின் கடல் மீன்வளத்திட்டங்கள் ஆகியவை உறுப்பினர் நாடுகளை சுறா மீன்களைப் பற்றிய விபரங்களைச் சேகரிக்க ஊக்குவிக்கும் முயற்சிகளைத் தொடங்கியது. சில நிகழ்வுகளில் இருப்புகளின் மதிப்பீட்டிற்காக மண்டல விபர மையங்களை அமைத்தது.

7.   சுறா மீன்களைப்பிடிப்பது விரிவடைவது மற்றும் அவற்றின் சாத்தியத்தால் சுறா மீன்களின் தொகையில் பாதிப்பு ஏற்படுவது ஆகியவை பற்றி அதிகரித்து வரும் அக்கறையை குறிப்பில் கொண்டு மார்ச் 1977ல் உவே அமைப்பின் மீன்வளக்குழுவில் முன்மொழியப்பட்டது. அதன்படி மிகையான நிதியைப் பயன்படுத்தி குழுவின் அடுத்த அமர்வுக்கு சமர்ப்பிக்க சுறா மீன்களைப்பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு செயல்திட்டத்திற்கான வழி முறைகளை அமைக்க வல்லுநர் கலந்தாய்வு ஒன்றை உவே அமைப்பு ஏற்பாடு செய்தது.

8.   சுறா மீன்களைப்பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக் கான (பசெதிந சுறா மீன்கள்) பன்னாட்டு செயல்திட்டம் சுறா மீன்களைப்பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான 1998[4] ஏப்ரல் 23 முதல் 27 வரை டோக்கியோவில் நடைபெற்ற தொழில் நுட்ப செயல்குழு கூட்டம் 1998 அக்டோபர் 26 முதல் 30 வரை ரோமில் நடைபெற்ற ஓடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக பிடிபடும் கடல் பறவைகள் மற்றும் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மைக்கான கலந்தாய்வு சுறா மீன்கள் மற்றும் 1998[5] ஜுலை 22 முதல் 24 வரை ரோமில் நடைபெற்ற ஆயத்தக்கூட்டம் ஆகியவற்றின் மூலமாக அமைக்கப்பட்டது.

9.   சுறா மீன்களுக்கான பன்னாட்டு திட்ட நடவடிக்கை அதன் நிலை நோக்கம் கோட்டுபாடுகள் குறிக்கோள்கள் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவற்றை இணைப்புகளையும் சேர்த்து செயல்படுத்தும் முறைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

**நிலை மற்றும் நோக்கம்**

10.   சுறா மீன்களுக்கான பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கை தன்னார்வமானது. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு பிரிவு 2 (ஈ) க்கு உட்பட்ட எல்லைக்குள் இது விவரிக்கப்படுகிறது. நடத்தை விதிக்தொகுப்பின் பிரிவு 3ன் பகுதிகள் இந்த பன்னாட்டு செதி நடவடிக்கையின் பயன்பாட்டிற்கும் விளக்கத்திற்கும் பயன்படுகிறது. பிற பன்னாட்டு சாதனங்களின் தொடர்பிற்கும் பயன்படுகிறது. இதனை செயல் படுத்த அனைத்து நாடுகளும்[6] ஊக்கப்படுத்தப்படுகின்றன.

11.   இந்த ஆவணத்தின் நோக்கத்திற்காக சுறா என்ற வார்த்தை அனைத்து சிற்றின வகை சுறா மீன்களையும் திருக்கை, உளுவை ஆகியவற்றையும் குறிக்கும். சுறா மீன்பிடிப்பு நேரடியான உபரியான வர்த்தக ரீதியிலான பொழுதுபோக்கான மற்றும் பிற முறைகளில் சுறா மீன்களைப்பிடிப்பதைக் குறிக்கும்.

12.   சுறா மீன்களுக்கான பசெதி நடவடிக்கை இலக்கு மற்றும் இலக்கு இல்லாத இரண்டையும் சூழ்ந்து கொள்ளும்.

**வழிகாட்டும் கோட்பாடுகள்**

13.   *பங்குகொள்ளுதல்.* சிற்றின மீன்வகையில் அல்லது இருப்பில் மீன் பிடிப்பு இழப்பினை வழங்கும் நாடுகள் இதன் மேலாண்மையில் பங்கு கொள்ள வேண்டும்.

---

4   பார்வை: "சுறா மீன்களைப்பாதுகாத்தல் மற்றும் மேலாண்மைக்கான உவே அமைப்பின் தொழில்நுட்ப செயல்குழு கூட்ட அறிக்கை" டோக்கியோ ஜப்பான் 23-27 ஏப்ரல் 1998 உவே அமைப்பு மீன்வள அறிக்கை எண். 583.

5   பார்வை: "மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் கலந்தாய்வு சுறா மீன்கள் மற்றும் ஓடுகயிறு மீன்பிடிப்பில் தற்செயலாக பிடிபடும் கடல் பறவைகள் ஆகியவற்றிற்கான ஆயத்தக் கூட்ட அறிக்கை" ரோம் இத்தாலி ஜுலை 22 - 24 1998 உவே அமைப்பு மீன்வள அறிக்கை எண். 584.

6   இந்த ஆவணத்தில் 'நாடு' என்ற வார்த்தை உவே அமைப்பின் உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதாரைக் குறிக்கும். நாடுகள் தவிர மீன்பிடி உரிமைகளுக்கும் பொருந்தும்.

14. *இருப்பை வளம் குன்றாது வைத்தல்.* ஒவ்வொரு இருப்பிலும் மீன்பிடிப்பு இழப்பை எச்சரிக்கை அணுகுமுறையைப்பயன்படுத்துவது மூலம் வளம் குன்றாத வகையில் வைத்திருப்பதை குறிக்கோளாக மேலாண்மை மற்றும் பாதுகாப்பு முறைகள் கொள்ள வேண்டும்.

15. *சத்து மற்றும் சமூக பொருளாதார கருத்துகள்.* குறைந்த வருமானம் உடைய உணவு பற்றாக் குறையுடைய சில பகுதிகள் மற்றும் அல்லது நாடுகளிலும் சுறா மீன்பிடிப்பு பாரம்பரியமானதாக, உணவு, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றிற்கான முக்கிய ஆதாரமாக உள்ளதையும் மேலாண்மை பாதுகாப்பு நோக்கங்கள் மற்றும் முறைகள் உணர வேண்டும். அத்தகைய மீன்பிடிப்புகள் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள சமுதாயத்திற்கு உணவு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை தரும் ஆதாரமாக வளம்குன்றாத வகையில் இருக்கும் வண்ணம் நிர்வகிக்கப்பட வேண்டும்.

**குறிக்கோள்கள்**

16. சுறா மீன்களுக்கான பசெதி நடவடிக்கை சுறா மீன்களைப்பாதுகாத்தல் மேலாண்மை செய்தல் அவற்றை நீண்ட காலத்திற்கு வளம் குன்றாத வகையில் பயன்படுத்துதலை உறுதி செய்யும்.

**செயல்படுத்துதல்**

17. தங்கள் நீர்ப்பரப்பில் தங்களுக்குச் சொந்தமான அல்லது அந்நிய மீன்பிடிகலன்களால் சுறா மீன் பிடிக்கப்படும் நாடுகளுக்குப் பொருந்தும் அல்லது ஆழ்கடலில் சுறா மீன்களைப்பிடிக்கும் கலன்களைக் கொண்டுள்ள நாடுகளுக்கும் பொருந்தும்.

18. தங்கள் கலன்கள் சுறா மீன்களுக்காக நேரடி மீன்பிடிப்பு நடத்தும் அல்லது வழக்கமாக நேரடியாக இல்லாத முறைகளில் சுறா மீன்களைப்பிடிக்கும் எனில் சுறா இருப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக தேசீய செயல் திட்ட நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும் (சுறா திட்டம்) பிற்சேர்க்கை 'அ' ல் சுறா திட்டத்திற்கான ஆலோசிக்கப்பட்ட உள்ளடக்கம் உள்ளது. பொாருத்தமான வகையில் சார் மண்டல, மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்களின் அனுபவமும் சுறா திட்டத்தை அமைக்கும் பொழுது கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு நாடும் அதன் சுறா திட்டத்தை அமைத்தல் செயல்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பு உடையதாகும்.

20. 2001ல் மீன்வளக்குழுவின் அமர்வில் சுறா திட்டம் பெற நாடுகள் கடுமையாக முயற்சித்தன.

21. சுறா திட்டத்தை ஏற்படுத்தும் அவசியம் இருக்கும் என தீர்மானிப்பதில் நாடுகள் வழக்கமாக மீன்பிடிப்பிற்கு உட்பட்டு சுறா இருப்பு நிலையை மதிப்பீடு செய்வதை மேற்கொள்ள வேண்டும். பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பில் பிரிவு 6.13 இந்த மதிப்பீட்டிற்கு வழிகாட்டுகிறது. நாட்டின் சுறா திட்டத்தின் பொருத்தமான பகுதியாக இந்த மதிப்பீடு அறிவிக்கப்பட வேண்டும். பிற்சேர்க்கை 'ஆ' சுறா மதிப்பீட்டு அறிக்கைக்கான ஆலோசிக்கப்பட்ட உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. வர்த்தக ரீதியான விபரங்கள் சிற்றின வகையை அடையாளம் காணுதலில் முன்னேற்றம் தொடர்பான விபரங்கள் இறுதியாக அட்டவணை நிறுவிடுதல் போன்றவற்றையும் சேர்த்து முரண்பாடற்ற விபரங்கள் சேகரித்தலை மதிப்பீடு இன்றியமையாததாக்குகிறது. நாடுகளால் சேகரிக்கப்பட்ட விபரங்கள் உரிய மண்டல, சார் மண்டல மீன்வள நிறுவனங்கள் உவே அமைப்பு ஆகிய வற்றிற்கு கிடைக்கச் செய்ய வேண்டும். வரையறைக்குட்பட்டு ஆலோசிக்கப்பட வேண்டும். இருப்பு மதிப்பீட்டிற்காக விபரம் சேகரித்தல் விபரங்களைப்பகிர்ந்து கொள்ளும் முறைகள் ஆகியவற்றில் பன்னாட்டு ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. குறிப்பாக எல்லை கடந்த எளிதில் இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரக்கூடிய பெருங்கடல் சுறா மீன் இருப்புகளுக்கு மிகவும் முக்கியமானது ஆகும்.

**22.** சுறா திட்டங்கள் கீழ்க்கண்டவற்றை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

- நேரடியாக மற்றும் மறைமுகமான மீன்வளம் மூலம் சுறா மீன்பிடிப்பு வளம்குன்றாத வகையில் உள்ளது என்பதனை உறுதி செய்தல்.
- சுறா தொகுப்பிற்கு ஏற்படும் ஆபத்தை மதிப்பிடுதல் கவலைக்கிடமான உறைவிடத்தைப் பாதுகாத்தல் உயிரியல் வளம் குன்றாத கோட்பாடுகளுக்கு முரண்பாடு இல்லாத ஏற்புடைய நீண்டகால பொருளாதர பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் அறுவடை செய்யும் முறைகளை செயல்படுத்துதல்.
- குறிப்பாக ஆபத்தில் உள்ள அல்லது எதிர்ப்பைத்தாங்க இயலாதவகை சுறா மீன் இருப்புகளை அடையாளம் கண்டு தனிக் கவனம் செலுத்துதல்.
- நாடுகளுக்கு உள்ளேயும் நாடுகளுக்கு இடையேயும் ஆராய்ச்சி, மேலாண்மை கற்பிக்கும் முதல் முயற்சிகள் ஆகியவற்றின் மீது பங்குதாரர்கள் அனைவரையும் ஈடுபடுத்தி திறமையான கலந்தாய்வினை ஏற்படுத்தி ஒத்துழைக்க அடிப்படை அமைப்புகளை ஏற்படுத்தி உயர்த்துதல்.
- பயன்படுத்தப்படாத தற்செயலான சுறா மீன்பிடிப்பை குறைத்தல்
- பல்வகை உயிரினப் பெருக்கம் சுற்றுச்சுழல் நிலை நிகழ்ச்சிமுறை ஆகியவற்றைப் பாதுகாத்தலுக்கு உதவிடுதல்.
- பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு பிரிவு **7.2.2.** (எ) க்கு இணங்க சுறா மீன்பிடிப்பில் வீணாகுதல் ஒதுக்குதல் ஆகியவற்றை குறைத்தல் (உதாரணமாக செதில்கள் நீக்கப்பட்ட சுறா மீன்களை வைத்திருப்பது தேவையானது).
- இறந்த சுறா மீன்களை முழுதுமாக பயன்படுத்துதலை ஊக்குவித்தல்.
- குறித்த சிற்றின வகைகளை பிடிப்பதை எளிதாக்குதல் இறக்கப்பட்ட விபரங்கள் சுறா மீன்பிடிப்பை நிர்வகித்தல் ஆகியவற்றை எளிதாக்குதல்.
- குறித்த சிற்றின வகையினை உயிரியல் வர்த்தக விபரங்களை அடையாளம் கண்டு அறிவித்தலை எளிதாக்குதல்.

**23.** திறனை உயர்த்துவதற்கு செலவினம் குறைந்த முறைகளை அடையாளம் காண்பதற்காக சுறா திட்டத்தை செயல் படுத்தும் நாடுகள் வழக்கமாக நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதன் செயல்பாடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும்..

**24.** சுறா திட்டம் தேவையில்லை என தீர்மானிக்கும் நாடுகள் அவற்றின் மீன்வளங்களில் ஏற்படும் மாறுதல்களை கருத்தில் கொண்டு அதன் அடிப்படையில் அத்தீர்மானத்தை ஒழுங்காக மறு ஆய்வு செய்ய வேண்டும். ஆனால் குறைந்த பட்சம் இறக்கப்பட்ட மீன் மீன்பிடிப்பு வர்த்தகம் போன்றவற்றின் விபரங்களைச் சேகரிக்க வேண்டும்.

**25.** தகுதிக்குத் தக்கவாறு அடிப்படை அமைப்பிற்கு உட்பட்டு பன்னாட்டு சட்டத்திற்கு முரண்பாடு இல்லாத வகையில் நாடுகள் மண்டல சார்மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் அல்லது ஏற்பாடுகள் மற்றும் பிற வகை ஒத்துழைப்புகள் மூலமாக ஒத்துழைக்க கடும் முயற்சி செய்தல் வேண்டும். பொருந்திய வகையில் சார் மண்டல அல்லது மண்டல சுறா திட்டங்கள் வளர்ச்சியை சேர்த்து சுறா இருப்புகளின் வளம்குன்றாத தன்மையை உறுதி செய்யும் நோக்கில் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

**26.** எல்லை கடந்து இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் ஆழ்கடல் சுறா இருப்புகளை இரண்டு அல்லது மூன்று நாடுகள் பயன்படுத்தும் இடங்களில் உரிய நாடுகள் இருப்புகளை

திறமையாக பாதுகாத்தலையும் மேலாண்மை செய்வதையும் உறுதி செய்ய கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

**27.** ஆராய்ச்சி பயிற்சி கற்பிக்க விபரங்களையும் பொருட்களையும் ஏற்படுத்துதல் ஆகியவற்றில் உவே அமைப்பு பன்னாட்டு ஏற்பாடுகள் மூலமாக ஒத்துழைக்க நாடுகள் கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

**28.** பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் மீது இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை அறிவித்தலின் பகுதியாக நாடுகள், சுறா திட்டத்தினை அமைத்தல் செயல்படுத்துதல் மீதான தங்கள் மதிப்பீட்டின் முன்னேற்றத்தை தெரிவிக்க வேண்டும்.

**உவே அமைப்பின் பங்கு**

**29.** உ..வேஅ இதன் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்றவரையும் வழக்கமான திட்ட நடவடிக்கைகளின் பகுதியாகவும் உவேஅ நாடுகளுக்கு சுறா திட்டங்களைத் தயாரிப்பது உட்பட சுறா மீன்களுக்கான பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கைகளில் உதவிடும்.

**30.** உவேஅ இதன் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்றவரை தனிப்பட்ட வழக்கமான திட்டங்களுக்கான நிதியுடன் நாட்டுக்குள் தொழில் நுட்ப உதவித் திட்டங்கள் மூலமாகவும் மற்றும் இந்த நோக்கத்திற்காக நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய மிகையான வரவு செலவு திட்ட நிதியைப் பயன்படுத்தியும் உவே அமைப்பு சுறா திட்டங்களை அமைத்து செயல் படுத்திட உதவும். சுறா திட்டங்களை அமைப்பது தொடர்பாக நாடுகளுக்கு வல்லுநர் மற்றும் தொழில் நுட்ப உதவிக்கான நுட்ப பட்டியலையும் உவேஅ வழங்கும்.

**31.** மீன்வளக்குழுவின் மூலமாக சுறா மீன்களுக்கான பசெதிந செயல்படுத்துதலில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் நிலை பற்றி உவேஅ இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிவிக்கும்.

**பிற்சேர்க்கை அ**

## சுறா திட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட உள்ளடக்கம்.

### I. பின்னணி

சுறா மீன்களுக்காக மீன்வளத்தை மேலாண்மை செய்யும் பொழுது சுறா மீன்களைப் பற்றிய அறிவு சுறா மீன்பிடிப்பில் செயல்படுத்தப்படும் முறைகள் ஆகியவை சுறா மீன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்வதில் பிரச்சனைகள் ஏற்படுத்தும் என்பதனைக் கருதுவது அவசியமாகும். குறிப்பாக:

- தொகுப்பு முறை இயல் பிரச்சனைகள்
- மீன்பிடிப்பில் உழைப்பு இறக்கப்பட்ட சுறா மீன்கள் மீதான கிடைக்கும் போதுமானதாக இல்லாத விபரங்கள்.
- இறக்கப்பட்ட பிறகு சிற்றின வகையினை அடையாளம் காண்பதில் சிரமங்கள்
- உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் மீதான போதுமானதாக இல்லாத விபரங்கள்
- சுறா மீன்கள் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி செய்வதற்கு நிதி இல்லாமை
- எல்லை கடந்த இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரும் ஆழ்கடல் சுறா இருப்புகளின் மீதான விபரங்களை சேகரிப்பதில் குறைந்த அளவிலான ஒத்துழைப்பு
- சுறா மீன்கள் பிடிக்கப்படும் பல்வகை சிற்றின மீன்வளத்தில் சுறா மேலாண்மை நோக்கங்களை அடைவதில் சிரமம்.

### II. சுறா திட்டத்தின் உள்ளடக்கம்.

உவே அமைப்பில் அமைக்கப்படும் சுறா மீன்களுக்கான மேலாண்மை மற்றும் பாதுகாத்தல் தொழில்நுட்ப வழிமுறைகள் சுறா திட்டம் அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல் இரண்டிற்குமான விரிவான தொழில்நுட்ப வழிமுறையை வழங்குகிறது. கீழ்க்கண்டவற்றின் மீது வழிமுறை வழங்கப்படுகிறது:

- நிர்வகித்தல்
- விபரம் சேகரித்தல் ஆய்வு செய்தல்
- ஆராய்ச்சி
- மனித வள திறனை நிர்மாணித்தல்
- மேலாண்மை முறைகளை செயல்படுத்துதல்

சுறா திட்டம் கீழ்கண்டவற்றைக் கொண்டிருக்கும்:

(அ) தற்சமயம் உள்ள நிலையை விவரித்தல்

- சுறா மீன்கள் இருப்பு தொகுப்பு
- தொடர்புடைய மீன்வளம் மற்றும்
- மேலாண்மை அடிப்படை அமைப்பு மற்றும் அதனை நடைமுறைக்கு கொண்டு வருதல்.

(ஆ) சுறா திட்டத்தின் நோக்கம்

(இ) நோக்கங்களை அடைவதற்கான முறைகள் எவை சேர்க்கப்பட வேண்டும் என்பதற்கு கீழ்க்கண்டவை எடுத்துக்காட்டான உதாரணங்கள் ஆகும்:

- மீன்பிடிகலன்கள் சுறா இருப்புக்கு செல்லும் பாதையை அடைவதில் கண்காணிப்பை உறுதி செய்தல்.
- சுறா மீன்பிடிப்பு வளம்குன்றும் வகையில் இருக்கும் இடங்களில் மீன்பிடி உழைப்பைக்குறைத்தல்.
- பிடிக்கப்பட்ட சுறா மீன்களின் உபயோகத்தை மேம்படுத்துதல்.
- தகவல் சேகரித்தல் சுறா மீன்பிடிப்பை நிர்வகித்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- சுறா மீன்களின் சிற்றினவகைகளை அடையாளம் காண்பதில் தொடர்புடைய அனைவரையும் பயிற்றுவித்தல்.
- குறைந்த அளவில் அறிந்த சுறா மீன்களின் சிற்றின வகைகள் மீதான ஆராய்ச்சியை ஊக்குவித்து எளிதாக்குதல்.
- சுறா சிற்றின வகைகள் மீதான பிற உபயோகம் மற்றும் வர்த்தக விபரங்களைப் பெறுதல்.

## சுறா மதிப்பீடு அறிக்கைக்காக ஆலோசிக்கப்பட்ட உள்ளடக்கம்

சுறா மதிப்பீடு அறிக்கை கீழ்கண்ட விபரங்களைப் பெற்று இருக்க வேண்டும்.

- கீழ்க்கண்டவற்றிற்காக முந்தைய மற்றும் தற்போதைய போக்கு:
    - உழைப்பு: நேரடியான நேரடியாக இல்லாத மீன்வளம் மீன்வளத்தின் அனைத்து வகைகளும்
    - மகசூல்: பொருள் சார்ந்த மற்றும் பொருளாதரம்
- இருப்பின் நிலை
- தற்போதுள்ள மேலாண்மை முறைகள்
    - மீன்பிடிக்கும் தளத்திற்கு செல்லும் வழியை கட்டுப்படுத்துதல்
    - தொழில் நுட்பமுறைகள் (அபகு) மீன்பிடிப்பைக் குறைக்கும் முறைகள் காப்பகங்கள் இருத்தல் பருவகால தடை ஆகியவற்றையும் சேர்த்து)
    - பிற
    - எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு
- மேலாண்மை முறைகளின் திறன்
- மேலாண்மை முறைகளில் இயலும் மாற்றங்கள்.

## மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகித்தலுக்கான பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கை

### முன்னுரை

1. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு குறித்த மற்றும் வளம் குன்றாத மீன்வளம் என்ற அதன் முழுமையான நோக்கத்திற்காக உலக மீன்வளத்தில் அளவுக்கு அதிகமான மீன்பிடிக்கும் திறன் ஒரு பிரச்சனையாகும். இது அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பிற்கு கணிசமாக உதவுகிறது கடல் வள ஆதாரங்களின் அழிவிற்கும் உணவு உற்பத்தி சாத்யத்தை குறைக்கவும் சிறப்பாக பொருளாதாரம் வீணாவதற்கும் உதவுகிறது.

2. நாடுகள் அளவுக்கு அதிகமான மீன்பிடிக்கும் திறமையை தடுக்க அல்லது நீக்க முயற்சி எடுக்க வேண்டும் என நடத்தை விதித் தொகுப்பு தெரிவிக்கிறது. மீன்பிடிப்பு உழைப்பின் நிலை மீன்வள ஆதாரங்களை வளம் குன்றாத வகையில் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு இருப்பதை நாடுகள் உறுதி செய்ய வலியுறுத்துகிறது.

3. 1997ல் மீன்வளக்குழு அதன் கடைசி அமர்வில் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறன் மீதான பிரச்சனைகளைப் பற்றி தெரிவிக்க உவே அமைப்பை கேட்டுக் கொண்டது. அமெரிக்காவில் லாஜோல்லா என்ற இடத்தில் 1998 ஏப்ரல் 15 முதல் 18 வரை மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகிப்பது பற்றிய தொழில் நுட்ப செயல்குழு ஒன்றிற்கு உவே அமைப்பு ஏற்பாடு செய்தது. 1998 ஜூலை 22-24ல் நடைபெற்ற தயார்படுத்தும் கூட்டத்திற்குப் பின் உவே அமைப்பின் கலந்தாய்வு 1998 அக்டோபர் 26-30ல் ரோமில் நடைபெற்றது.

### பகுதி 1 பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கையின் நிலை மற்றும் நோக்கம்

4. பசெதி நடவடிக்கை தன்னார்வமானது பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு பிரிவு 2 (ஈ) க்கு உட்பட்ட எல்லைக்குள் இது விவரிக்கப்படுகிறது. நடத்தை விதித்தொகுப்பின் பிரிவு 3 ன் பகுதிகள் இந்த பசெதி நடவடிக்கை பயன்பாட்டிற்கும் விளக்கத்திற்கும் பயன்படுகிறது பிற பன்னாட்டு சாதனங்களின் தொடர்புக்கும் பயன்படுகிறது.

5. இந்த ஆவணம் அனைத்து நாடுகளுக்கும்[7] நடத்தை விதித்தொகுப்பை செயல்படுத்தும் பொறுப்பை மேலும் அதிகப்படுத்துகிறது. தொடர்புடைய நிறுவனங்களின் தகுதியான ஆற்றலின் அடிப்படை அமைப்பிற்குட்பட்டும் பன்னாட்டு சட்டத்திற்குட்பட்டும் நாடுகள் மற்றும் மண்டல[8] மீன்வள நிறுவனங்கள் இந்த ஆவணத்தைப் பயன்படுத்த வேண்டும்.

6. மீன்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் வளம்குன்றாத வகைக்கான மேலாண்மை என்பனவற்றை பசெதி நடவடிக்கைகள் உண்டாக்கும்.

### பகுதி 2-நோக்கம் மற்றும் கோட்பாடுகள்

7. 2003க்குள் ஆனால் 2005க்கு மேற்படாது இயன்றவரையில் உலக அளவில் நாடுகள் மற்றும் மண்டல மீன்வளநிறுவனங்கள் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை திறமையாக வெளிப்படையாக நேர்மையாக மேலாண்மை செய்யும் நிலையை அடைவதையே பசெதி நடவடிக்கையின் உடனடி நோக்கமாகும். அளவுக்கு அதிகமான திறன் என்ற பிரச்சனையை எதிர்கொள்ளும் நாடுகள் மற்றும் மண்டல மீன்வள நிறுவனங்கள் திறன் வளம் குன்றாத வகையிலான வெளிப்பாடுகளை வலிவற்றதாக்கும் இடங்களில் முதலாவதாக தற்போதைய நிலையில் கட்டுப்படுத்திட முயற்சி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட மீன்வளத்திற்கு

---

7 இந்த ஆவணத்தில் ''நாடு'' என்ற வார்த்தை உவே அமைப்பின் உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதாரைக் குறிக்கும். நாடுகள் தவிர'' மீன்பிடி உரிமைகளுக்கும்'' பொருந்தும்.

8 இந்த ஆவணத்தில் ''மண்டலம்'' என்ற வார்த்தை பொருந்தியவாறு சார் மண்டலத்தையும் உள்ளடக்கும்.

பயன்படுத்தும் மீன்பிடித் திறனைக் குறைக்க வேண்டும், நீண்டகால குன்றாத வகையிலான வெளிப்பாடுகளை அடையும் பொழுது எனினும் நாடுகள் மற்றும் மண்டல மீன்வள நிறுவனங்களுக்கு நீண்ட கால வளம்குன்றாத வகைக்கான நோக்கங்களை நலிவுறச் செய்யும் திறனின் வளர்ச்சியைத் தவிர்க்க எச்சரிக்கையைப் பயன்படுத்தும் தேவை உள்ளது.

**8.** பெரிதான **4** முறைகளுக்கு தொடர்புடைய வரிசையான நடவடிக்கைகள் மூலமாக மேற்கொண்ட நோக்கங்களை அடையலாம்

i. தேசீய மண்டல மற்றும் உலக அளவில் திறன் மதிப்பீடு நடத்துதல் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை நிர்வகிக்கும் திறமையை மேம்படுத்துதல்.

ii. மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை திறமையாக மேலாண்மை செய்வதற்கும் விரைவான முறைகள் தேவைப்படும் கடலோர மீன்வளத்திற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள தேசீய திட்டங்களை அமைத்து செயல்படுத்துதல்.

iii. மண்டலம் மற்றும் உலக அளவில் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதில் முன்னேற்றத்திற்கான தொடர்புடைய நுட்பங்களையும் மற்றும் மண்டல மீன்வள நிறுவனங்களையும் வலிவாக்குதல்.

iv. விரைவான முறைகள் தேவைப்படும் எல்லைகடந்த இடம்பெயராத மற்றும், பெரிதும் இடம் பெயரும் ஆழ்கடல் மீன்வளத்திற்கு உடனடி நடவடிக்கைகள்.

இந்த பசெதி நடவடிக்கைகளை செயல்படுத்துதலை மேம்படுத்த இம்முறைகள் பாராட்டுவதற்குரிய நுட்பங்கள் மூலமாக செயல் படுத்தப்பட வேண்டும். விழிப்புணர்வு ஏற்படுத்துதல் கல்வி, பன்னாட்டு அளவில் தொழில் நுட்ப ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு.

**9.** மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்தல் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் அடிப்படையில் இருக்க வேண்டும். கீழ்க்கண்ட முக்கிய கோட்பாடுகளையும் அணுகுமுறைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

i. *பங்குகொள்ளுதல்:* பசெதி நடவடிக்கை நாடுகளால் செயல்படுத்தப்பட வேண்டும். நேரடியாகவோ பிறநாடுகளின் ஒத்துழைப்போடு உரிய மண்டல மீன்வள நிறுவனங்களை உள்ளடக்கிய அரசுக்குள்ளேயான நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் உவே அமைப்பு மூலமாக செயல்படுத்துதல் வேண்டும். பொருந்தியவகையில் இதனை அமுல்படுத்த நாடுகள் மற்றும் மண்டல மீன்வள நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இதனை செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கையை உவே அமைப்பிற்கு தெரிவிக்க வேண்டும். உவே அமைப்பு அது செயல்படுத்தும் விபரங்களை தவறாது வழங்கும்.

ii. *படிப்படியாக செயல்படுத்துதல்:* கீழ்க்கண்ட மூன்றுபடிகளில் தேசீய மற்றும் மண்டல திட்டங்கள் அடிப்படையில் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்தல் நிறைவேற்றப்பட வேண்டும். மதிப்பீடு மற்றும் நிர்ணயித்தல் (**2000** க்குள்ளாக முன்னேற்பாடான ஆய்வு முடிக்கப்பட வேண்டும்) மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் (**2002** க்குள் முன்னேற்பாடான முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்) அத்தகைய மதிப்பீடு மற்றும் நிர்ணயித்தல் முறைகளை பொருந்தியவாறு காலமுறையில் மாற்றி அமைத்துக்கொள்ளுதல், நாடுகள் மற்றும் மண்டல மீன்வள நிறுவனங்கள் இம்முறைகளைப் பூர்த்தி செய்து **2005**ல் முன்னேற்பாடாக பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கையில் குறிப்பிடப்பட்ட பாராட்டுதலுக்கான முறைகளை செயல்படுத்த வேண்டும்.

iii. *முழுமையான அணுகுமுறை:* தேசீய மற்றும் பன்னாட்டு நீர்ப்பரப்பில் திறனைப்பாதிக்கும் அனைத்து காரணிகளையும் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மை பரிசீலிக்க வேண்டும்.

iv. *பாதுகாத்தல்:* மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மை மீன்இருப்பை பாதுகாத்தல் வளம்குன்றாத வகையில் பயன்படுத்துதல் முரண்பாடற்ற பாதுகாப்பு அணுகுமுறையுடன் கடல்சார் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் உப மீன்பிடிப்பு வீணாக்குதல் ஒதுக்குதல் ஆகியவற்றை குறைத்திடும் தேவை சுற்றுச்சூழலுக்கு உகந்த குறிப்பிட்ட மீன்பிடிப்பு முறைகளை உறுதி செய்தல் கடல் சார் சுற்றுச் சூழலில் பல்வகை உயிரினப் பெருக்கத்தை பாதுகாத்தல் உறைவிடங்களை குறிப்பாக தனித்தன்மையுடைய உறைவிடங்களை கருத்தில் கொண்டு பாதுகாத்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட வேண்டும்.

v. *முன்னுரிமை:* ஏற்கனவே தெளிவாக அளவுக்கு அதிகமாக மீன்பிடிப்பு இருக்கும் மீன்வளத்தில் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்ய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

vi. *புதிய தொழில் நுட்பங்கள்:* பிடிக்கப்படும் அனைத்து மீன்வளத்திலும் சுற்றுச்சூழலுக்கு உகந்த படிப்படியாகத் தோன்றும் தொழில் நுட்பத்தை உருவாக்குவதை கருத்தில் கொண்டு மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்தல் வடிவமைக்கப்பட வேண்டும்.

vii. *நகரும் தன்மை:* மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை திறமையாகப் பயன்படுத்துவதை மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மை ஊக்குவிக்க வேண்டும். அது வளம்குன்றாத தன்மையை எதிரிடையாகப் பாதிக்கும் எனில் நகரும் தன்மையை ஊக்கப்படுத்துதல் கூடாது. பிற மீன்வளங்களில் ஏற்படும் சமூக பொருளாதார செயல்பாடுகளை உரிய முறையில் கொள்ளுதல் வேண்டும்.

viii. *வெளிப்படை:* விதித்தொகுப்பின் **6.13** பிரிவிற்கு இணங்க பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கை வெளிப்படையான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

**10.** நடத்தை விதித்தொகுப்பினை குறிப்பாக பிரிவு **5** ஐ அடிப்படையாகக் கொண்டு பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டும். வளரும் நாடுகளின் இயலும் தன்மையை உயர்த்திடும் முறையில் தங்களுக்கு சொந்தமான மீன்வளங்களை மேம்படுத்த அவ்வாறே தங்களுக்கு உள்ள சட்டபூர்வமான உரிமை மற்றும் பன்னாட்டு சட்டத்திற்குட்பட்டு தங்கள் கடமைகள் ஆகியவற்றிற்கு இணங்க அத்தகைய மீன்வளங்களை சென்று அடைய வழியையும் சேர்த்து ஆழ்கடல் மீன்பிடிப்பில் பங்கு கொள்ள தொடர்பான அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

பகுதி 3 விரைவான நடவடிக்கைகள்

<u>பிரிவு I</u> : **மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மதிப்பிடுதல் மற்றும் நிர்வகித்தல்.** ***மீன்விடிக்கக் கொண்டிருக்கும் திறனை அளவிடுதல்.***

11. மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மதிப்பிடுதல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான பிரச்சனைகளின் அடிப்படை அம்சங்களை சிறப்பாக புரிந்து கொள்வதற்காக தேசீய மண்டல மற்றும் உலக அளவில் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு நாடுகள் உதவிட வேண்டும்.

12. உவே அமைப்பின் நிறுவனத்தின் கலந்தாய்வு 1999ல் இயன்றவரை விரைவாக நடைபெறுவதற்கு நாடுகள் உதவிட வேண்டும். மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை வரையறை செய்தல் அளவிடுதல் தொடர்ந்து விபரங்கள் சேகரிக்க ஆய்வு செய்ய தொழில் நுட்ப வழிமுறைகளை தயார் செய்தல் ஆகியவற்றைப் பற்றி கலந்தாய்வு செய்யப்பட வேண்டும். தேசீய மண்டல மற்றும் உலக அளவில் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனையும் அளவுக்கு அதிகமான மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனையும் தொடக்க மதிப்பீடு செய்வதற்கான தனிப்பட்ட வழிகாட்டுமுறையை கலந்தாய்வின் முடிவு வழங்கும் என்பதனையும் குறிப்பில் கொள்ள வேண்டும்.

***மீன்வளங்கள் மற்றும் மீன்பிடிகலன்களை அடையாளம் காணுதல் தீர்மானித்தலுக்கு தேவையான விரைவு நடவடிக்கைகள்***

13. தேசீய அளவில் முதன்மையான மீன்வளத்தில் தொடர்புடைய அனைத்து மீன்பிடிகலன்களில் உள்ள மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் தொடக்க மதிப்பீட்டுடன் 2000ம் ஆண்டு முடிவில் நாடுகள் முன்னேறுதல் வேண்டும். காலமுறையில் மதிப்பீட்டை அன்றைய நாள் வரை சரிக்கட்ட வேண்டும்.

14. நாடுகள் 2001ம் ஆண்டு முடிவில் விரைவான நடவடிக்கை கோரும் மீன்பிடிகலன்கள் மற்றும் தேசீய மீன்வளங்களை முறையாக அடையாளம் காண்பதுடன் முன்னேற வேண்டும். காலமுறையில் மதிப்பீட்டை அன்றைய நாள் வரை சரிக்கட்ட வேண்டும்.

15. இதே காலகட்டத்திற்குள் மண்டல அளவிலான இத்தகைய மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் தொடக்க மதிப்பீடு மேற்கொள்ளும் நிறுவனங்களுடனும் (தொடர்புடைய மண்டல மீன்வள நிறுவனத்திற்குள்ளாக அல்லது பொருந்தியவாறு அவற்றின் ஒத்துழைப்புடன்) மற்றும் உலக அளவில் (உவே அ மூலமாக) நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். எல்லைகடந்து இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மற்றும் ஆழ்கடல் மீன்வளத்திற்காகவும் அவ்வாறே விரைவான நடவடிக்கைகள் கோரும் தேசீய மீன்வளம் மற்றும் மீன்பிடிகலன்களை அடையாளம் காண்பதற்கும் ஒத்துழைக்க வேண்டும்.

**மீன்பிடிகலன்களின் பதிவுகளை நிறுவுதல்**

16. மீன்பிடிகலன்களின் பதிவுகளுக்காக பொருத்தமான இணக்கமான வரையறுக்கப்பட்ட மாதிரிகளை அமைக்க உவே அமைப்பிற்கு நாடுகள் உதவிட வேண்டும்.

17. பொருத்தமான இணக்கமான மீன்பிடிகலன்களின் தேசீய பதிவுகளை ஏற்படுத்தி நாடுகள் நிர்வகிக்க வேண்டும். மேலும் விபரங்கள் பெறும் வழிக்கு நிபந்தனைகளைக் குறிப்பிட வேண்டும்.

18. ஆழ்கடலில் மீன்பிடிகலன்கள் பன்னாட்டு பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை மேம்படுத்தும் ஒப்பந்தத்தை (இணக்க ஒப்பந்தம்) அமுல்படுத்த காத்திருக்கும் வேளையில் உவே அமைப்பு நிறுவிய இணக்க ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு மாதிரிகளைப் பின் பற்றி ஆழ்கடலில் செயல்படும் மீன்பிடிகலன்களின் பன்னாட்டு பதிவிற்கு நாடுகள் 2000ம் ஆண்டு முடிவிற்குள் உதவிட வேண்டும்.

## பிரிவு II: தேசீய திட்டங்களைத்தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்.

**19.** மீன்பிடிக்கக்கொண்டிருக்கும் திறன் மீது பல்வேறு ஆதார மேலாண்மை அமைப்புகளின் விளைவுகளை கருத்தில் கொண்டு மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதற்கான தேசீய செயல்திட்ட நடவடிக்கைகளை நாடுகள் அமைத்து செயல்படுத்தி நிர்வகிக்க வேண்டும்.

**20.** திட்டமிட்டவாறு சரியாக மீன்பிடிக்கக்கொண்டிருக்கும் திறனை நிர்வகிக்க முறைகளை நாடுகள் அமைக்க வேண்டும். மேலாண்மை நோக்கங்கள் மற்றும் கிடைக்கும் மீன்வள ஆதாரங்கள் ஆகியவற்றிற்கு இடையே ஏற்றத்தாழ்வு உள்ளதா என்பதை வழக்கமாக மதிப்பிட வேண்டும்.

**21.** மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மைக்கான தேசீய திட்டங்களை 2002ம் ஆண்டு இறுதிக்குள்ளாக நாடுகள் அமைத்து பின்பற்றி பொதுவானதாக ஆக்க வேண்டும். தேவையெனில் கிடைக்கும் ஆதாரங்களை வளம் குன்றாத வகையில் வைத்திட மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை சரி செய்ய மீன்பிடிக்கக்கொண்டிருக்கும் திறனை குறைக்க வேண்டும். மீன் இருப்புகளின் மதிப்பீட்டை இவை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். விரைவான நடவடிக்கைகள் தேவைப்படும் நிகழ்வுகளுக்கு தனிக்கவனம் வழங்குதல் வேண்டும். அதிகம் பிடிக்கப்படுவதாக தெளிவாக உணரப்படும் இருப்புகளுக்கு மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மையை தெரிவிக்க உடனடி முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

**22.** மீன்பிடிக்கக்கொண்டிருக்கும் திறனைக் குறைப்பதால் மீனவ சமுதாயத்தினர் பெறும் சுமையைக்குறைக்க வேலைவாய்ப்பு பிழைப்பு ஆகியவற்றிற்கு மாற்று ஏற்பாடுகளை பரிசீலிப்பது உட்பட சமூக பொருளாதாரத் தேவைகளுக்கு தேசீய திட்டங்கள் அமைப்பதில் நாடுகள் உரிய அக்கறை காட்ட வேண்டும்.

**23.** திறனை மேலாண்மை செய்ய தேசீய திட்டங்கள் தேவையில்லை என்பது தெரிய வந்தால் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறன் மீன்வள மேலாண்மையில் தொடர்ந்து தடையின்றி செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுவதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்

**24.** திறனை உயர்த்துவதற்கு செலவினம் குறைந்த முறைகளை அடையாளம் காண்பதற்காக திறனை மேலாண்மை செய்வதற்கான தேசீய திட்டங்கள் செயல்படுத்துவதை நாடுகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் ஆய்வு செய்ய வேண்டும்.

**மான்யம் மற்றும் பொருளாதார ஊக்கம்**

**25.** நாடுகள் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதற்காக தேசீய திட்டங்களை அமைக்கும் பொழுது அவற்றின் வளம்குன்றாத வகையிலான மேலாண்மையின் மீது அளவுக்கு அதிகமான திறனுக்கான மான்யங்கள் உள்ளிட்ட அனைத்து காரணிகளின் விளைவுகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். மான்யம் உள்ளிட்ட காரணங்களுக்கு இடையே அளவுக்கு அதிகமான திறன் வழங்குவது மற்றும் வளம்குன்றவைப்பது எவை நடுநிலையானவை எவை என்பனவற்றை வேறுபடுத்தி அறிதல் வேண்டும்.

**26.** பாரம்பரிய மீனவர்களின் தேவைகளுக்கு உரிய கவனம் அளித்து மான்யம் பொருளாதார ஊக்கம் உள்ளிட்ட அனைத்து காரணங்களையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கடல்வாழ் உயிரின ஆதாரங்களின் வளம்குன்றாத தன்மையை வலுவிழக்கச் செய்யும் அளவுக்கு அதிகமான மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை வளர்க்கும் மற்றும் பிற காரணிகளையும் நாடுகள் குறைத்து முன்னேற்றமான முறையில் தவிர்க்க வேண்டும்.

**மண்டல சிந்தனைகள்**

**27.** மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை திறமையாக மேலாண்மை செய்வதை உறுதிசெய்திடும் விதத்தில் பொருந்திய இடங்களில் மண்டல மீன்வள நிறுவனங்களுடன் அல்லது ஏற்பாடுகளுடன் மற்றும் பிற ஒத்துழைப்பு முறைகள் மூலமாக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.

**28.** மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஆராய்ச்சி பயிற்சி கற்பிக்க விபரங்களையும் பொருட்களையும் ஏற்படுத்துதல் ஆகியவற்றில் உவே அமைப்பு மற்றும் பன்னாட்டு ஏற்பாடுகள் மூலமாக ஒத்துழைக்க நாடுகள் கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

**<u>பிரிவு III</u> பன்னாட்டு சிந்தனைகள்**

**29.** மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வது தொடர்பான பன்னாட்டு ஒப்பந்தங்களில் பங்கு பெறுவதை நாடுகள் பரிசீலிக்க வேண்டும். குறிப்பாக இணக்க ஒப்பந்தம் இடம்பெயராத மீன் இருப்புகள் மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல் தொடர்பான 1982 டிசம்பர் 10 கடல் சட்டம் ஐக்கிய நாடுகளின் மரபு பகுதிகளை செயல்படுத்துதலுக்கான ஒப்பந்தம் ஆகியவற்றை பரிசீலிக்க வேண்டும்.

**30.** நாடுகள் அனைத்து மண்டல மீன்வள நிறுவனங்களுடன் அவற்றின் முறைகளுக்கு ஏற்ப ஒத்துழைப்பு மற்றும் விபர பரிமாற்றங்களுக்கு உதவிட வேண்டும்.

**31.** நாடுகள் ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் தங்கள் கலன்களின் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆழ்கடலில் அளவுக்கு அதிகமாக பிடிக்கப்படும் மீன் இருப்பினை பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் திறனை குறைக்க பொருந்தியவாறு பிற நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டும்.

**32.** பொருந்திய இடங்களில் மண்டல மீன்வள நிறுவனங்கள் மூலமாக மற்றும் உவே அமைப்பின் ஒத்துழைப்புடன் நாடுகள் அவற்றின் கலன்களால் ஆழ்கடல் மற்றும் கடலோரப் பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களின் விபரங்கள் சேகரிப்பதை மேம்படுத்த வேண்டும்.

**33.** நாடுகள் கொடிநாடு என்ற ரீதியில் தங்கள் மீன்பிடிகலன்களின் தொடர்பாக பன்னாட்டு சட்டத்திற்குள் குறிப்பாக அவர்களின் எல்லையை உபயோகித்தல் தொடர்புடைய பன்னாட்டு சட்டவிதிகள் பன்னாட்டு பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகள் ஆகியவற்றை வலுவற்றதாக்குதல் அவற்றிற்கு எதிரான வகையில் இயங்கும் அவர்களின் மீன்பிடிகலன்களை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றாத நாடுகளின் பிரச்சனைகளை சமாளிக்கும் தேவையை உணர்தல் வேண்டும்..

**34.** மண்டல மீன்வள நிறுவனங்கள் அல்லது ஏற்பாடுகளின் உறுப்பினராக நாடுகள் ஊக்கப்படுத்தப் படவேண்டும். தங்கள் கலன்களுக்கு அத்தகைய நிறுவனங்கள் அல்லது ஏற்பாடுகள் நிறுவி பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளைப்பயன்படுத்திட ஒப்புக் கொள்ள ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

**35.** உவே அமைப்பின் உதவியுடன் மண்டல மீன்வள நிறுவனம் மற்றும் ஏற்பாடுகள் இணக்க ஒப்பந்தத்தின் பிரிவு 6ல் உள்ளவற்றிற்கு இணங்க பயன்படுத்திடும் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்கி நடக்காத கலன்களின் மீன்பிடி நடவடிக்கை பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்வதை நாடுகள் மேம்படுத்த வேண்டும்.

**36.** இணக்க ஒப்பந்தத்தை அமுலாக்க நுழைதலை எதிர்நோக்கி அந்த ஒப்பந்தத்தின் பிரிவு 3ன் பகுதிகளைப் பயன்படுத்த நாடுகள் முயற்சிக்க வேண்டும்.

**37.** அந்த நாட்டின் முறையான அங்கீகாரம் விரைவான சம்மதம் இன்றி பிற நாட்டின் எல்லைக்கு திறனை மாற்றம் செய்தல் நடைபெறாது என்பதனை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

**38.** கொடி நாடுகள் என்ற ரீதியில் அவற்றின் பணிகளுக்கு இணங்கி தங்கள் கொடிகளைப்பறக்க விடும் கலன்களை ஆழ்கடலுக்கு மாற்றம் செய்தலை நாடுகள் தவிர்க்க வேண்டும். நடத்தை விதித்தொகுப்பின் கீழ் அத்தகைய மாற்றங்கள் இணக்கமற்றவை.

**பிரிவு IV பெரிய பன்னாட்டு மீன்வளங்கள் கோரும் விரைவு முறைகளுக்கு உடனடி நடவடிக்கைகள்.**

**39.** விரைவான கவனத்தைக் கோரும் பன்னாட்டு மீன்வளங்களுக்காக எல்லை கடந்தஇடம்பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் குறிப்பிடும்படியாக அளவுக்கு அதிகமாக பிடிக்கப்படும் ஆழ்கடல் மீன் இருப்புகளுக்கு முன்னுரிமை அளித்து மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதைத் தெரிவிக்க உடனடியாக முறைகளை நாடுகள் மேற்கொள்ளும்.

**40.** கண்ணியமான அவற்றின் தகுதிக்கு ஏற்றவரம்பிற்குள்ளாக நாடுகள் தனியாகவோ இருமுனையாகவோ அல்லது பல முனையாகவோ பொருந்தியவாறு உறுதியாக[9] இந்த ஆதாரங்களுக்காகப் பயன்படுத்தப்படும் கலன்களின் திறனைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பன்னாட்டு செயல் திட்ட நடவடிக்கைகளின் உரிய பகுதிகளுக்கு ஏற்ப கூடுதலாக அளவுக்கு அதிகமாக பிடிக்கப்பட்ட இருப்புகளை வளம்குன்றாத நிலைக்கு கொண்டு வருதலைக் கருத்தில் கொண்ட மேலாண்மை முறைகளின் பகுதியாக இது விளங்கும்.

i. அளவுக்கு அதிகமாக பிடிக்கப்படும் இருப்புகளை பிடிக்கும் கலன்களை பொருளாதார முக்கியத்துவம் இருப்புகளின் வளம்குன்றாத தன்மை பொருளாதார ஒப்பேறக் கூடிய தன்மை ஆகியவற்றுக்கு ஏற்றப்படி கட்டுப்படுத்தும் தேவை; மற்றும்

ii. முழுதும் பயன்படுத்தப்பட்ட அல்லது அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட மீன்வளங்களில் அளவுக்கு அதிகமாக திறனை மீன் இருப்புகளின் நிலையை கருத்தில் கொண்டு மாற்றம் செய்திடுவதை கட்டுப்படுத்த பொருத்தமான முறைகளைப் பயன்படுத்துதல்.

**பகுதி 4 செயல்படுத்துதலை மேம்படுத்தும் நுட்பங்கள்.**

**41.** தேசீய மண்டல மற்றும் உலக அளவில் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதற்கான தேவை மற்றும் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனில் சரிசெய்தலால் ஏற்படும் செலவு மற்றும் பயன் ஆகியவற்றின் தேவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நாடுகள் விபரம் அளிக்கும் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

***விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு***

**42.** மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மை குறித்த பிரச்சனைகளில் விஞ்ஞான தொழில் நுட்ப விபரங்களை பரிமாற்றம் செய்து நாடுகள் உதவ வேண்டும். தற்சமயம் உள்ள மண்டல மற்றும் உலக அளவிலானவற்றைப் பயன்படுத்தி அவை உலக அளவில் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

---

[9] தேவைப்படும் குறைப்பு மீன்வளம் ஒவ்வொன்றிற்கும் மாறுபடும்; உ.ம். பெரிய அளவிலான சூறை மீன்பிடிக்கும் ஓடு கயிறு கலன்களில் 20 முதல் 30 சதம் குறைப்பு தெரிவிக்கப்படுகிறது (உவே அ மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறன் மேலாண்மை மீதான தொழில்நுட்ப செயற்குழு அறிக்கை. லா ஜோல்லா அமெரிக்கா 1998 15-18 ஏப்ரல் உவே அமைப்பின் மீன்வள அறிக்கை எண் 586)

**43.** பயிற்சி நிறுவனத்தை வலுப்படுத்துதல் போன்றவற்றிக்கு நாடுகள் உதவ வேண்டும். மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வது தொடர்பான பிரச்சனைகளில் வளரும் நாடுகளுக்கு நிதி தொழில் நுட்பம் மற்றும் பிற உதவிகள் வழங்க பரிசீலிக்க வேண்டும்.

***அறிவித்தல்***

**44.** பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் மீது இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை அறிவித்தலின் பகுதியாக நாடுகள் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனை மேலாண்மை செய்வதற்கான திட்டங்களை அமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல் மீதான முன்னேற்றத்தை உவே அமைப்பிற்கு அறிவிக்க வேண்டும்.

***உவே அமைப்பின் பங்கு***

**45.** உவேஅ இதன் கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்றவரை உரிய விபரங்களையும் தகவல்களையும் சேகரிக்கும். இவை மேற்கொண்டு ஆராய்வதற்கு அடிப்படையாக அமையும். அளவுக்கு அதிகமான திறனை வழங்கும், கொடுக்கப்படுதல் மற்றும் உற்பத்தி, கட்டுப்பாடு குறைதல், வளத்தைக் குன்ற வைக்கும் மீன்வள மேலாண்மை முறைகள், அளவுக்கு அதிகமான திறனை வழங்கும் மான்யம் போன்ற காரணிகளை அடையாளம் காண்பதை ஆய்வு நோக்கமாகக் கொண்டிருக்கும்.

**46.** உவேஅ இதன் கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்றவரை வழக்கமான திட்ட நடவடிக்கைகளின் பகுதியாக நாடுகள் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மைக்கான தேசீய திட்டங்களை செயல்படுத்திட உதவும்.

**47.** இதன் கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இயன்றவரை தனிப்பட்ட வழக்கமான திட்டங்களுக்கான நிதியுடன் நாட்டுக்குள் தொழில் நுட்ப உதவித் திட்டங்கள் மூலமாகவும், மற்றும் இந்த நோக்கத்திற்காக நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய மிகையான வரவு செலவு திட்ட நிதியைப்பயன்படுத்தியும் மீன்பிடிக்கக் கொண்டிருக்கும் திறனின் மேலாண்மைக்கான தேசீய திட்டங்களை அமைத்து செயல்படுத்திட உவே அமைப்பு உதவிடும்.

**48.** மீன்வளக்குழுவின் மூலமாக பசெதி நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் நிலையைப் பற்றி உவேஅ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிவிக்கும்.

நாடுகளுக்குப் பொருந்தும் பன்னாட்டு செயல்திட்ட நடவடிக்கைகள் தன்னார்வமானவை. செயல்படுத்தும் நாடுகள் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு பன்னாட்டு திட்ட செயல் நடவடிக்கையின் பகுதியும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பிரச்சனை உள்ளதா என்பதனை மதிப்பிடுதல் தேசீய செயல்திட்ட நடவடிக்கையைப் பின்பற்ற முறைகள் தேசீய ஆய்வு முறைகள் மற்றும் அறிவித்தலுக்கான தேவைகள் போன்றவை இதனுள் அடங்கும். திட்டத்தின் செயல் நடவடிக்கை ஒவ்வொன்றிலும் விதிக்கப்பட்ட முறைகள் செயல்படுத்தப்படும் தேதியும் குறிக்கப்பட வேண்டும்.

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*